# ஏவாளின் புன்னகை

ஈழக்கவி கவிதைகள்

# ஏவாளின் புன்னகை

ஏழக்கவி

ஜீவநதி வெளியீடு
2015

ஏவாளின் புன்னகை ◆ கவிதைகள் ◆ ஆசிரியர் : ஈழக்கவி ◆
முதற் பதிப்பு : யூலை 2015 ◆ பதிப்புரிமை : ஆசிரியருக்கு ◆
அட்டைப்பட வடிவமைப்பு : ஈழக்கவி ◆
வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய் ◆ பக்கம் : 112 ◆
விலை : 250/- ◆ அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி.

ஜீவநதி வெளியீடு: 53

Awalin Punnakai ◆ Poems ◆ Author : Elakkavi
◆ First Edition : July 2015 ◆ Copy Rights : Author ◆
Cover design : Elakkavi◆
Publication: Jeevanathy, Kalaiaham, Alvai ◆ Pages : 112 ◆
Price : 250/- ◆ Printers : Bharanee Printers, Nelliyady

ISBN : 978-955-4676-36-7

இந்த புன்னகை

என் அன்பு மனைவி

ஷாமிளாவுக்கு...

# பதிப்புரை

ஈழக்கவியின் இரண்டாவது கவிதைத் தொகுப்பாகவும் ஜீவநதியின் 53 ஆவது வெளியீடாகவும் "ஏவாளின் புன்னகை" வெளிவருகின்றது. ஈழக்கவியின் முதற் தொகுப்பான "இரவின் மழையில்" கவிதைத் தொகுப்பும் ஜீவநதியின் வெளியீடாக வெளிவந்து பல விருதுகளையும் பலரது வரவேற்பையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஈழத்து உலகை நன்கறிந்து, இரசித்து தன் படைப்பாளுமையை ஆழ்ந்த வாசிப்பனுவத்தினூடாக புதிய பாணியில் படைத்துவரும் இந்நூலாசிரியர் ஈழத்து இலக்கியத்துக்கு வலிமை சேர்க்கக் கூடியவர் என்பதை இவரது படைப்புக்களை வாசிப்பவர்கள் நன்கறிவார்கள்.

அதிபராக கடமையாற்றும் ஏ.எச்.எம்.நவாஸ் என்னும் இயற்பெயருடை ஈழக்கவி அவர்கள் வேலைப் பளுக்களுக்கிடையேயும் தரமான படைப்புக்களை தொடர்ந்து தந்து கொண்டிருப்பது இலக்கியத்தின் மீதான அவரது தீராத ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றது. இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் கவிதைக்குரிய கட்டமைப்போடு சாதாரண வாசகர்களும் இலகுவில் புரிந்து கவிதை இன்பத்தை சுவைக்கத்தக்க வகையில் படைக்கப் பட்ட தரமான கவிதைகளாக விளங்குகின்றன. இத்தொகுப்பு வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயம் இல்லை. வாழ்க கவிஞர் ஈழக்கவி.

– க.பரணீதரன்

என் உணர்வுகளின்
மொத்தத்திலும்
நீ இருக்கிறாய்
நீயே இருக்கிறாய்
உயிராய்!

## பொருளடக்கம்

உம்மாவுக்காக முதல் இரு கவிதைகள் :

1. உம்மா இல்லாத இருப்பில் / 01
2. தாய் / 03
3. அந்நியன் / 04
4. அமைச்சரின் கட்டவுட் / 06
5. அரசியல்வாதியின் டப்பாவுக்குள்/ 09
6. அவளின் ஒளி பரிதியாக / 11
7. அவளென்ற படிமம் / 12
8. இதுவா தேர்தல் / 14
9. இரவுக்கவிதையின் இறுதிவரிகள் / 16
10. உவமையும் கனவும் / 18
11. உன் அழகில் கொஞ்சம் / 19
12. உன் கண் ஓவியங்களால் வாழுதல் / 21
13. ஊடல் / 23
14. ஊத்தைப் பேச்சுக்கு உதாரணம் / 24
15. ஊரையே தின்ட உனக்கு / 26
16. எப்பவும் இப்படித்தான் / 28
17. எரிந்த கானகம் / 30
18. என் உயிர் உன் கைகளில் / 32
19. என்ன செய்யப்போகிறோம் / 34
20. என்னை என்ன செய்துகொண்டிருக்கிறாய் / 36
21. ஏவாளின் புன்னகை / 38
22. கடலாகி பாடல் எழுதுதல் /40

23. கண்களுக்கு இனிப்பு ஊட்ட / 42
24. கவிதையான கவிதைகள் /43
25. கனவில் அமைச்சர்கள் / 45
26. கோடை மழை / 48
27. கோபம் / 50
28. தர்கா நகர் / 51
29. தற்கொலை செய்த தூக்கம் / 52
30. தொலைந்த இலைராஜாக்கள் / 54
31. தூக்கணாங் குருவிகளின் பண்பாட்டை சிதைத்தல் / 56
32. நரிக்கும் முயலுக்கும் கல்யாணம் /58
33. நாய்கழியாய் மழை / 60
34. நிலவுக்குள் உறங்கிய நான் /62
35. நினைவுக் கவிதைகள் / 64
36. நினைவுகள் மரங்களாய் முளைத்தல் / 66
37. நினைவுச் சுழி / 68
38. நீ ஆகிய தூக்கம் / 69
39. நூறுவீதமாய் கரைதல் / 70
40. பாம்பு / 71
41. பேய்களின் ஆய்வறையில் / 73
42. பேய்களுடன் உறங்குபவர்களுக்கு / 76
43. மானம் விற்று சுவர்க்கம் செல்லல் / 77
44. மீரியா பெத்த / 79
45. ரோஷநரம்பை எடுத்தல் / 80
46. வயிறெரிந்த நெருப்பு / 82
47. வரலாற்றை படுகொலை செய்தல் / 84
48. வன்புணர்வின் இரத்தமும் இனவெறி மொழிகளும் / 86
49. வாயால் சேறு பூசுதல் / 88
50. புன்னகையும் வலியும் / 90

# ஒரு முன்னுரை

"ஏவாளின் புன்னகை" என்னுடைய 2ஆவது கவிதைத்தொகுப்பு. முதல் தொகுப்பு "இரவின் மழையில்" 2013இல் வெளிவந்தது. இதற்கு "ஆடம்பரமான" வெளியீட்டு விழாக்களை நடாத்த நான் முயற்சிக்கவில்லை. மற்றும் நூலை விற்று பணம் சேகரிக்கும் முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. என் உணர்வுகளில் இருந்து எழுதப்படுகின்ற கவிதைகளை விற்பனை பண்டமாக்க எனக்கு தோன்றவில்லை. என் முதல் நூல் பெரும்பாலும் இலவசமாகவே வழங்கப்பட்டது. இருந்தும் சிலர், "ஒரு எழுத்தாளனே தனது செலவில் நூலையும் வெளியீட்டுக் கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலையை புரிந்து" உதவியிருக்கிறார்கள். குறிப்பாக என் இளைய சகோதரி மும்தாஜ் அவர்கள். கவிஞர் வெளிமடை ரபீக்கும் சில புத்தகங்களை விற்றுத் தந்தார்.

"இரவின் மழையில்" நூல், செலவுத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கையேனும் பெற்றுத்தராவிட்டாலும், மனதை தொடுகின்ற அளவுக்கு விமர்சனங்களை தந்திருக்கின்றது. நான் வேண்டுவது இதுவே! விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன் (தினகரன் வாரமஞ்சரி), கவிஞர் மேமன் கவி (மலைகள் இணைய இதழ்), எழுத்தாளர் சிறி சிறிஸ்கந்தராஜா (காற்றுவெளி மின்னிதழ்), பீ.என்.நஸீரா (ஜீவநதி, தினக்குரல்) முதலானவர்கள் தன்னுடைய விமர்சன கருத்துக்களை முன்வைத்திருந்தனர். யாழ்ப் பாணத்தில் ஒரு ஆய்வரங்கில் இந்நூல் விமர்சன ஆய்வு செய்யப்பட்டது. என் ஆத்மாவின் நேத்ரா tv "கோடை மழை"யிலும் "இரவின் மழை" நனைந்தது. முகநூலில் கருணாகரன், றியாஸ் குரானா, யாழ் இலக்கியக் குவியத்தைச் சேர்ந்த வேலணையூர் தாஸ், பீ.என்.நஸீரா, ஓ.எச்.ரஹ்மா பீபி போன்றவர்கள் எழுதினர். மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும், கடித மூலமாகவும் தொலைப்பேசியிலும் நேரிலும் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

மாதிரிக்கு ஒரு துளி :

"80பதுகளில் இருந்து ஈழக்கவி என்ற பெயரில் கவிதைகள் எழுதிவரும் ஏ.எச்.எம். நவாஷ் அவர்களின் "இரவின் மழையில்" என்ற கவிதைத் தொகுப்பு இன்று எனக்கு தபாலில் கிடைத்தது.

அத்தொகுப்பில் இரு பகுதிகளாக கவிதைகள் தொகுக்கப்பட்டிருக் கின்றன. 2010 களுக்குப் பின் அவரால் எழுதப்பட்டிருக்கும் கவிதைகள் எனக்கு முக்கியமாகப்படுகின்றன. அவர் ஈழத்து நவீன கவிதை முகாமில் இணைத்து வாசிக்கப்படுவதற்கு ஏதுவான உள்ளீடுகளை அந்தக் கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இனிவரும் ஈழத்து கவிதை குறித்த விமர்சனப் பார்வைகளில் தவிர்க்க முடியாமல் போன ஒருவராக இவர் மாறியிருப்பதை அவரின் கவிதைகள் உணர்த்தி நிற்கின்றன.

மிக்க அன்பு நவாஷ்."

கவிஞர் றியாஸ் குரானா முகநூலில்.

இத்தகைய கருத்துக்களின் உந்துதலினால் இணைய இதழ் களிலும், முகநூலிலும் நிறையவே எழுதினேன். "மலைகள் இணைய இதழ்" ஆசிரியர் சிபிச் செல்வன் அவர்களின் தூண்டுதலினால் அதிக கவிதைகளை மலைகள் இணைய இதழில் எழுத முடிந்தது. அதேபோல் "காற்றுவெளி" மின்னிதலிலும், "சோனகர் வலைத்தளத்"திலும் என்னுடைய கவிதைகள் தொடர்ச்சியாக களம் கண்டன. சோனகர் வலைத்தளத்தில் என் கவிதை களுக்காக ஒரு பக்கத்தையே (<http://www.sonakar.com/cat=149>) உருவாக்கியிருக்கிறார்கள். இன்மை போன்ற இணைய இதழ்களிலும், ஜீவநதி, விடிவெள்ளி, படிகள், பூங்காவனம் போன்றவற்றிலும் என் கவிதை கள் பதிகை ஆகின. அனைவருக்கும் என் ஆத்மார்த்த நன்றிகள் உரித்தாகுக.

நான் எழுதிய கவிதைகளில் இருந்து தேர்ந்தெடுத்த சில கவிதைகளை "ஏவாளின் புன்னகை"யாக தொகுத்திருக்கிறேன். நவீன கவிதை எழுதுதல் மட்டுமல்ல, கவிதை பற்றிய நுண்ணிய தேடல்களும், விசாரணைகளும் முனைப்பாக்கம் பெற்றுள்ள, தற்கால சூழலில் எனது தொகுப்பும் வெளிவருகின்றது.

ஒரு கவிதை என் ஆழ்மனசுக்குள் படிமமாக விரிகின்ற போது, எனக்குள் மகிழ்ச்சிகரமான "உந்தல்" ஏற்படுகின்றது. என் உணர்வுகளை தொற்றிக்கொள்கின்ற ஒரு இனம்புரியாத பரவசம் அது. முதலில் இந்த "கவித்தவ" நிலையை நான் உணர்வுப்பூர்வமாக ஏற்கின்றேன். சிலவே

சொற்களாக கவிவடிவம் கொள்கின்றன. அவற்றை செய்நேர்த்தியோடு கவிதையாக மனஉள்வெளிக்குள் செதுக்குகின்றேன். என்னால் ஏற்க முடிகின்ற கவிதையாக அது அமைகின்ற போது, எனக்குள் "கவித்துவ திருப்தியுடன்" சந்தோஷம் ஏற்படுகின்றது. அத்தகைய கவிதைகளை மட்டுமே எழுதுகின்றேன். எழுதப்பட்ட கவிதைகளை விட, என்னால் நிராகரிக்கப்பட்ட கவிதைகளே மலையளவு.

எல்லாவற்றையும் கவிதையாக்கும் மனசு எனக்கு. உணர்வின் அதிர்வுகளே கவிதையாகின்றன. கவிதை எனக்கு "ஜீவஉயிர்ப்பாக" இருக்கின்றது. அதற்காகவே எழுதுகின்றேன். உங்களுக்கும் "பிடித்தால்" வாசித்துப்பாருங்கள்.

இத்தொகுப்பு உருவாக்கலில் உதவிய ஆசிரியைகளான நளீரா, ரஹுமா, சிபாயா ஆகியோருக்கும், எப்பவும்போல மனத்திருப்தியோடு வெளியிடும் "ஜீவநதி" அசிரியர் க.பரணீதரன் அவர்களுக்கும், என்னை கவிதையாகவே நேசிக்கும் அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்து!

நல்லன்புடன்,
ஈழக்கவி
20072015

தொடர்புகளுக்கு:
AHM.Nawaz
28, Haputhale Rd.,
Welimada 90200,
Sri Lanka.
071 84 32 960
ahmnawas@gmail.com
<mailto:ahmnawas@gmail.com>

உம்மாவுக்காக முதல் இரு கவிதைகள்...

# உம்மா இல்லாத இருப்பில்

உம்மா இருந்த இருப்பில்
எனக்கு எல்லாம் இருந்தது

இப்போ
என் வானத்தில் பால் நிலா இருந்தும்
ஒளிர்வு இல்லை
குளிர்மை இல்லை
என் ஒளி உம்மா தானே

இன்று
சுவர்க்கத்து மாதுளை பழங்கள் கிடைத்தும்
எல்லாம் உப்புச்சப்பாக

குசினியில் சாக்கு போட்டு
என்னை உட்கார வைத்து
எண்ணையில் பதமாக்கிய கீரையுடன்
உம்மா தந்த சோற்றுக்காக
என் நா ஊறுகின்றது

சந்தையில் தேடித் தேடி எனக்காக
உம்மா வாங்கி வரும்

நாட்டு பப்பாசி பழங்களின்
ருசி என் நாக்கு முழுக்க இப்பவும்

நேற்று
உம்மாவின் அடக்கஸ்தலத்திற்குப் போனேன்
அங்கு ஒரு மரம்
அந்த மரத்திலுள்ள ஒவ்வொரு இலையும்
உம்மாவின் விழிகளாய் பேசின
உம்மாவின் பாசமொழியை சொல்ல
ஏது வரிவடிவம்.

10052014 காலை 9.30 மணி

# தாய்

நிலத்தின் தாகத்தை மீறிய வேகத்தில்
மழை கொட்டியது
நிலவாயிலிருந்து சிதறிய நீர்
பிரவாக மெடுக்கையில்
ஒரு குடில் பாய்மரமாக
கடல் நோக்கி இழுக்கப்படுகிறது
குடிலுக்குள் இருந்த தாயின் உயிரை
நீர் குடிக்கத் தொடங்குகின்றது
நெஞ்சில் புதைந்திருந்த குழந்தையை
கிழிந்த புடவைத்துண்டால்
பொம்மையோடு இறுகக் கட்டி
கடலில் எறிகிறாள் அந்தத்தாய்

26082014 இரவு 10.00 மணி

# அந்நியன்

நல்லவனாக இருத்தல்
அல்லது
உண்மையாக இருத்தல்
அல்லது
நேர்மையாக இருத்தல்

எரிந்துக்கொண்டிருக்கும்
ஒரு கானகத்தின் மத்தியில்
தனித்திருத்தல் போல

அகோரப் பசி கொண்ட
ஒரு சிங்கத்தின் வாயில் அகப்பட்ட
ஒரு மான் குட்டி போல

எருமை மாடுகள் படுத்திருக்கும் சேற்றில்
இறக்கைகள் முறிந்து விழுந்த
ஒரு வண்ணத்துப்பூச்சுப் போல

முதலைகள் மட்டுமே இருக்கின்ற
ஒரு நதியில்
நீந்திக் குளிக்கின்ற ஒருவனைப்போல

கத்திகள் வீசப்படும் களத்தில்
பொம்மையைத் தேடும்
ஒரு சிறுமியைப் போல

திருடர்கள் ஒளிந்திருக்கின்ற
குகைக்குள்
பணக்கட்டுடன் நுழைந்தவன் போல

செவிடர்கள் படிக்கின்ற பள்ளியில்
வீணை வாசிப்பவன் போல

பெருச்சாளிகள் கூட்டத்தில்
அந்நியமாக்கப்பட்ட
ஒரு கூண்டுக்கிளியைப் போல

19092014 இரவு 9.00 மணி

## அமைச்சரின் கட்டவுட்

ரயிலைவிட்டு இறங்கும் போது
நடுராத்திரி
கைப்பையை சுமந்தவாறு
நடக்கிறேன்

சாக்கினைப் போர்த்தியவாறு
மக்கள்வங்கி வாசலில்
ஒரு யாசகன் படுத்திருந்தான்
சற்று தொலைவில்
சமூக சேவைகள் அமைச்சரின்
உருவம் பதித்த கட்டவுட்
இரவுக் கடை முன்னால்
பீடிப் புகையுடன் ஒருவன்
கறுப்புப்பூனையொன்றும் அவனுடன்

ஒற்றையடிப் பாதைக்குள் நுழைகிறேன்
நாய்களின் ஊளை வானை கிழிக்கிறது
நிலவும் இருட்டுப் போர்வைக்குள்
சுருண்டுப் படுத்திருக்க வேண்டும்
வெளிச்சம் கிஞ்சித்தும் இல்லாத கும்மிருட்டு
காலால் தடாவித்துழாவி நடக்கிறேன்

ஒற்றை மின்கம்ப விளக்கு
மயானத்தை காட்டிற்று
நம்பாத மோகினிப் பிசாசு
மனசுக்குள் ஆட்டம்போடத் தொடங்கிவிட்டது
அவற்றின் எச்சில்
என் முகத்தில் வியர்வையாக

பெண் போல ஒரு உருவம்
என் முன்னால்
பிரமை... பிரமை
இல்லை... இல்லவே இல்லை
பெண் பெண்ணேதான்
கைக்குழந்தையுடன்!

அவள் பேசுகிறாள்
குழந்தை அழுகின்றது
ஓடுகிறேன் ஓடுகின்றேன்

ஆனால் நான் ஓட ஓட
அந்தப் பெண் என்முன்னால்

அச்சம் தவிர் கவிஞனாய்
அவளைப் பார்க்கிறேன்
அவள் பேசுகிறாள்
என்னைக் கண்டு பயந்து ஓடாதீர்கள்
என் பெண்மையை
வெறிபிடித்த சிங்கங்களாகி குதறி
ஒரு குழந்தையையும் தந்து
கொன்று எரித்த

அந்த அரசியல் வாதிகளுக்கு
பயந்து ஓடுங்கள்
ஓட்டு போடாமல் ஓடுங்கள்
பயந்து ஓடுங்கள்

அனுதாபத்துடன் அவளை உற்றுப்பார்க்கின்றேன்
வானுயர்ந்த கட்டவுட்டில்
அமைச்சர் கையசைத்துக் கொண்டிருந்தார்

22052015 நேரம் மாலை 4.00 மணி

## அரசியல்வாதியின் டப்பாவுக்குள்

பசுமை கொழிக்கும் கிராமத்துக்குள்
நாலைந்து நாளாய்
பிணம் சுடுகின்ற மணம்
நாறித் தொலைகிறது

செத்தவனை புதைக்க மட்டுமே
தெரிந்த கிராமம் அது

அப்படியானால்
பிணம் சுடும் மணம் எப்படி

கிராமமே மூக்கை மூடி திண்டாடுகிறது
குழந்தைகள் மூச்சுச் திணறிக் கொண்டிருந்தன
தின்ன எடுக்கும் உணவுக்குள்
பிசாசுகள் இருப்பது போன்றதொரு பிரமை

கடற் கொள்ளைகாரர்கள் போல
கிராமத்தின் பசுமையை எல்லாம்
அந்த பிணமணம் சுருட்டி எடுத்துக் கொண்டிருந்தது

மக்கள் அவிந்து மரணவேதனைக்கு
ஆளாகும் போதில்தான்

தேவதூதன் போல
அந்த அரசியல்வாதி வந்தான்
பிண மணத்தை
சாம்பிராணி மணமாக மாற்றினான்

மக்கள் வாக்களித்து அவனை
அரச அவையில் வாழவைத்தார்கள்

அடுத்த தேர்தல் காலம் வரும் வரைக்கும்
பிணம் சுடுகின்ற மணம்
அரசியல்வாதியின்
அந்தரங்க டப்பாவுக்குள்

*06022014 இரவு 10.30 மணி*

# அவளின் ஒளி பரிதியாக

காலை குளிரை அருந்திக்கொண்டிருந்தது
இருட்டுக் குகைக்குள் மயங்கிக்கிடந்த சூரியன்
சிவந்த கண்களை கசக்கத் துவங்குகிறது
மெல்ல வெயில்
மலைகளின் ஜன்னல் திறக்கிறது
இலைகளில் குளங்கள்
நீரள்ளும் கிளிகள்
பட்சியின் இறகுகளை
அவள் உடுத்த ஆரம்பிக்கிறாள்
பறக்க முன்
அவள் மொழியால் எழுதிமுடித்திருந்த
இரவுக் கவிதையை அவள் முன் வைக்கிறேன்
கவிதையின் முதல்வரியைப் பார்த்தவள்
என்னை அவள் விழியாக்கி
அவளைப் பார்த்து சிரித்தாள்
அந்த சிரிப்பின் ஒளியுடன்
நான் வெளியானேன்
ஒரு ஆட்டுக்குட்டியாய் பரிதி
என் ஒளியின் பின்னால்

16032015 இரவு 8.30 மணி

## அவளென்ற படிமம்

இன்றிரவு
நீ ஒரு படிமமாகி வர
நான் அதற்குள் தூங்கிப்போனேன்

நமக்குள் இருக்கின்ற
நிஜத்தில்
நீ இத்தனை அழகாக இருந்ததில்லை
அது இரா மழையில் நனைந்து
வைகறையில் மெல்ல ததும்பி வருகின்ற
சிவப்பு ரோஜாவின் அழகு

வானத்தில் அலைந்துத் திரிகின்ற
வெண்மேகத்தின் அமைதி உனக்கு
அதை ஏன் மறைத்து வைத்திருக்கிறாய்

பச்சை கிளியின் பாஷையில்
பேசவும் தெரிகிறது உனக்கு
அதை மறந்து ஏன்
ஏச்சையே பேச்சாக்கிக் கொள்கிறாய்

பகல் சூரியனின்

வெளிப்படையான வெளிச்சமும்
நடுராத்திரி நிலவின் குளிர்மையும்
உன்னில்...
ஏன் என்னோடு இருக்கும் போதில்
எல்லா ஒளிகளையும் மறைத்துக் கொள்கிறாய்
உன் குளிர்மையை தொலைத்துக் கொள்கிறாய்

ஆனாலும்
உன் பாசமென்ற நீரூற்று
எப்பவும் போலதான்
இந்த படிமத்துக்குள்ளும்
அது போதுமே நான் தழைக்க

01122013 நேரம் காலை 11.20 மணி

## இதுவா தேர்தல்

ஒரு மகா கேவலத்தின்
அவதாரமா
இந்தத் தேர்தல்
மின்சாரக் கம்பங்கள்
புலம்பக் கேட்டேன்

ஒரு மகா அநியாயத்தின்
செயலா
இந்தத் தேர்தல்
தெருச் சுவர்கள்
அழப் பார்த்தேன்

ஒரு மகா பொய்யின்
ஜனிப்பா
இந்தத் தேர்தல்
காற்று
எரிய உணர்ந்தேன்

எதையும் கணக்கிலெடுக்காத
சிறகு முளைத்த எருமை
வானத்தில் வட்டமிடுதலில்
ஊர் அதிரக் கண்டேன்

அந்த எருமையின்
ஒப்பனை செய்யப்பட்ட
கொடூர பிரதியுடன்
சாணம் ஊரெல்லாம்
விழுந்துத் தொலைந்தது

சாணத்தைப் பார்த்த
தெரு நாயொன்று
இதுவா தேர்தல் என்றது
இரண்டு கால்களுக்கு
இன்னும் ரோசம் வரவில்லையா
என்று கேட்பது போல
தெரு நாய் குரைத்தது

09122014 இரவு 10.15 மணி

# இரவுக்கவிதையின் இறுதிவரிகள்

இரவு தன் நெடிய கவிதையின்
இறுதி வரிகளை எழுதிக்கொண்டிருந்தது
சேவல் உரத்த தொனியில்
அந்த கவிச்சொற்களை சொல்லத்தொடங்குகின்றது

உம்மா அந்த வைரவரிகளின் கவித்துவ ஈர்ப்பில்
குசினிக்குள் காவியமாவாள்

இரவுக் கவிதையின் இறுதிவரிகளை
விரும்பிப் படிக்கும் நான்
வைகறைத் தொழுகைக்காக பள்ளிக்குச் செல்வேன்
மூடுபனியின் குளிர்முகத்தில் முத்தமிட்டவாறே

இரவின் முழுக்கவிதையையும் மூச்சுவிடாமல் படித்து
முடித்திருந்த மரங்கள் இலைத்தாளில் அதை எழுதி
முற்றுப் புள்ளி வைத்தன

காகம் எழுத்துக்கூட்டி படிக்கிறது
பரிதிஆசான் வெயில்பிரம்புடன் வரமுன்

பட்சிகள் தன் பாடல்களுக்கு
மெட்டமைக்கத் தொடங்கிவிட்டன

தெரு நாய்களுக்கு கவிதைமொழி தெரியாததால்
குப்பைமேல் சுருண்டுப்படுத்திருந்தன
தூக்க வியாதி பிடித்த சில மனிதர்களைப் போல

இரவுக் கவிதையின் காதல் உருவகங்களுக்கு
உயிர் ஊட்டி மகிழ்ந்தவர்கள்
சூரிய பானையில் வெயில்நீர் கொதித்து ஒழுகும்போதே
சோம்பல்முறித்து எழுவார்கள்

இரவுக் கவிதையின் இறுதி வரிகளை
உணர்வுபூர்வமாய் படிப்பவர்களுக்கே
அந்த நாளின் வசந்தச்சாவி கிடைக்கிறது

08082014 இரவு 12.00 மணி

## உவமையும் கனவும்

ஒரு அறையைப் போல
நான்
ஜன்னல்களை மூடியது யார்
காற்றா நீயா
கதவை சாத்தி சாவியை
எடுத்துப் போனது
நீ இல்லை என்பது தெரிகிறது
உள்மனதின் சுட்டுவிரல்
உன்னை நோக்கியே
தனித்து அடைப்பட்டிருத்தல்
பறந்துப் பழகிய
ஒரு பட்சியின் இறகுகளில்
தீ மூட்டுதல் போல
நடுக்கடலில்
ஒரு கப்பல் தலைக்கீழாக கவிழ்தல் போல
எல்லாம் எரிந்து
ஒரு பிடிசாம்பலோடு இருக்கிறேன்
இந்த உவமையை பொய்யாக்கி
உன் பரந்த புல்வெளிக்கு
என்னை அழைத்துப் போகிறாய்
கனவில்

20032015 இரவு 9.30 மணி

# உன் அழகில் கொஞ்சம்

முகம் கழுவ முனையும் போது
என் கண்மணியில்
உன் அழகில் கொஞ்சம்
ஒட்டியிருப்பதைப் பார்த்தேன்

கரையில் தவறி விழுந்த
மீன் குஞ்சை மெல்ல எடுத்து
நீரில் விடுதல் போல
அந்த அழகை எடுத்து
கிளி கூட்டில் வைத்தேன்

அதிகாலை
பட்சிகளின் பாடல்
என் வீடு முழுக்க எதிரொலிக்க
எழுந்து அதிர்ந்துப் போனேன்

ஊரின் பறவைகளெல்லாம்
கிளி கூட்டிலிருந்த
அந்த அழகை ஆராதிக்க
சண்டை பிடித்தன
என் கூட்டுக் கிளி

அழகின் முழுமையை அடைந்திருந்தது
ஒரு ஞானி முத்தி நிலையை
அடைதல் போல

18062015 காலை 8.50 மணி

## உன் கண் ஓவியங்களால் வாழுதல்

நேற்றைய நாட்களில்
உன் கண்கள் வரைந்த
சித்திரங்கள்
எனக்குள்
சிரிக்கவும் பேசவும்
தொடங்கி விட்டன

மாமரத்து கனிகளை
என் கிளிகளுடன் சேர்ந்து
சுவைத்துக் கொண்டிருக்கிறேன்

ஆப்பிள் மரத்தில்
நீ வரைந்திருந்த காய்களின்
நிறங்கள் மங்கிவிட்டதால்
அது அரூபமாவிட்டது

பறவைகளுடன்
வானத்தில் பறக்கிறேன்
நிலவு கையருகில்

நதிகளில் மீன்கள்

உன்னைத் தேடி
பாடுகின்றன

இரா காலத்தில்
நீ கிறுக்கிய கீறல்கள்
என் தொண்டையில்
மீன்முள்ளென சிக்கிவிட்டன

ஆணி அடித்தாற் போல
உட்கார்ந்து
உன் கண் ஓவியங்களுக்கு
காவியம் எழுதிக்கொண்டிருக்கிறேன்
படிப்பாயா?

05102014 இரவு 9.30 மணி

## ஊடல்

குறிஞ்சியின் உரி அவளது மனசுக்குள் கொதித்தது
கண்ணென்ற கடல் கொந்தளித்தது
தேனீர் கோப்பைகளை கைகள் மூலப்பொருளாக்கின
ஊழியை காண விரும்புகின்றவர்கள்
அவளது முகத்தை பார்க்கலாம்
இதையா புதுமைப்பித்தன்
கண்ணகி தாண்டவம் என்றார்
நாடகத்தின் இறுதிக்காட்சியில்
அரங்கு அதிர்ச்சியில்
இப்படி அதிர்ந்தது
இடியோடு கூடிய கோடைமழை
அவனது மனம்
சுடப்படாத பசும் மண்பாத்திரத்தைப் போல;
சிதைகின்றது
உயர்ந்த மரக்கிளையில் அமர்ந்து
தன் குட்டியை இறுக தழுவிக் கொண்டிருக்கும்
தாய் குரங்கின் இரக்க உணர்வுகளுடன்
அவனை அவள் தழுவ முனைகிறாள்
திரை மூடப்படுகின்றது.

*பார்க்க, குறுந்தொகை **29**ஆம் பாடல்

18062015 காலை 9.40 மணி

## ஊத்தைப் பேச்சுக்கு உதாரணம்

அந்தி வானம்
இன்று கொஞ்சம் அதிகமாகவே
“ரெட்வைன்“ குடித்திருக்க வேண்டும்
அதன் கண்கள் சிவந்துக் கறுத்திருந்தன
கள்ளுக் குடிக்காரர்கள் கூடியிருக்கும்
இடத்தினை தாண்டிச் செல்லும் போது
அவர்களின் பேச்சினை
காது கொடுத்து கேட்டேன்
அவர்கள் வாந்தி எடுத்தாலும்
பேச்சில் வாந்தி எடுக்கும்
அருவருப்பு இருக்கவில்லை
இவ்வளவு காலமும்
குடிகாரர்களின் பேச்சுதான்
ஊத்தை பேச்சுக்கு உதாரணம்
என்று எண்ணி இருந்தேன்
என் எண்ணம் பொய்த்துப் போச்சு
இப்போதெல்லாம்
பாராளுமன்றத்தில்தான் ஊத்தை பேச்சை
தாராளமாய் கேட்க முடிகின்றது
ஊருக்கு நல்லதை செய்ய
பாராளுமன்றம் அனுப்பப் பட்டவர்கள்

ஊத்தை பேச்சுக்கு உதாரணம் ஆகி
ஊத்தை ஆகிப்போனார்கள்
குப்பை மேட்டில்
எரிபடவேண்டியவர்களுக்கு
இனியும் ஓட்டு போடலாமா

28052015 இரவு 8.00 மணி

## ஊரையே தின்ட உனக்கு

நான் மீன்
நீரில் தான் இருப்பேன்
கடல்தான் என் இருப்பிடம்

நானாக கரைக்கு வரமாட்டேன்

நண்டு ஆசாமி போல்
கடலிலும் கரையிலும்
வாழ முடியாதவன்

உயிர் கொல்ல
தரைக்கும் தாவும்
பொல்லாத முதலை
வரம் பெறாதவன்

அரசியல் சிங்கம் போல
ஏன் என்னை தரைக்கு
அழைக்கிறாய்?

யுத்த காலங்களில்
பச்சை உயிர்களை

சுட்டுக் குவித்தது போல
உயிரோடு என்னை
கொழுந்து விட்டெரியும்
நெருப்பில் துடிதுடிக்க
சுட்டுத்தின்ன நினைக்கிறாயா?

பிணம் வெட்டுபவன் போல
துண்டு துண்டாக வெட்டி
பொரித்து அல்லது
கறிஆக்கி உண்ண
வாயூறுகிறாயா?

சொகுசுக்காக சதா வாய்திறந்திருக்கும்
அரசியல்காரன் நீ
எதையும் செய்வாய்
இனவாத பாம்புகளுக்கு
நீ பாலூட்டும் அநியாயம் கண்டு
பேரலையாக பதறியிருக்கிறோம்

என்னையா விடப்போகிறாய்
சரி பிடித்து சாப்பிடு
ஊரையே தின்ட உனக்கு
நான் ஒரு துளி

18082014 இரவு 11.30 மணி

## எப்பவும் இப்படித்தான்

இப்படித்தான்
எப்பவும் இனத்துவேஷஅரக்கர்கள்
இப்படித்தான்

கற்குகை போல ஆழ்ந்து அகன்ற
வாய்களிலிருந்து இவர்களுக்கு
வார்த்தைகள் வருவதில்லை
பன்றிக் கூட்டங்கள் போல
பேய்களே வெளியாகின்றன

அந்த பேய்கள் மூடிய மரமண்டைகள்
பைத்தியக்கார வெறித்தனங்களுடன்
பள்ளிவாயல்களை தகர்க்கும்
வர்த்தக நிலையங்களுக்கு நெருப்பை உமிழும்
வீடுகளை உடைத்து நொறுக்கும்
வாளால் கத்தியால் வெட்டி உயிர்கொல்லும்
தங்கள் மயானங்களை
கொள்ளைபொருட்களால் நிரப்பிக்கொள்ளும்

சீருடை உடுத்திய துப்பாக்கிகள்
பைத்தியங்களுக்கு காவல் நிற்கும்
சிதிலமடைந்த அப்பாவிகளை சுட்டுத்தள்ளும்

இப்படித்தான்
எப்பவும் சீருடை உடுத்திய துப்பாக்கிகள்
இப்படித்தான்

நேற்றும் அரக்கர்கள்
அளுத்கம, தர்க்காநகர், பேருவளை, வெல்பிட்டிய நகரங்களை
சாம்பல் மலையாகவும்
இரத்த ஆறாகவும் ஆக்கி பேய்க்கூத்தாடினர்

சீருடை உடுத்த துப்பாக்கிகளுடன் சேர்ந்து
46 நாள் குழந்தையின் குருதியை
உயிர்நீத்த சகோதரர்களின் மண்டையோடுகளில் ஊற்றி
கிராமத்தவர்கள் சிரட்டைகளில்
ஊற்றிய கள்ளை ருசித்து குடிப்பதைப்போல
அரச ஊறுகாயை நக்கியவாறு குடித்தனர்

இன்னும் வெறியோடு இனவெறியோடு
எம்மவர்களின் பொருளாதாரத்தை கொளுத்தியவாறு
அரக்க தலைகளில் மூளைகளுக்கு பதிலாக
பெற்றோல் குண்டுகள்
அரசாங்கம் பெற்றோல் நிரப்பு நிலையமாக

இப்படித்தான்
எப்பவும் ஆட்சியாளர்கள்
இப்படித்தான்

14062014 பகல் 1.00 மணி

## எரிந்த கானகம்

இணைந்திருந்த அந்த நாட்களில்
என் மனநிலத்துக்குள்
விதைகளை விதைத்துப் போவாய்
உனக்கு நினைத்தால் நீர் ஊற்றுவாய்
மகத்தான நாட்களில் மழை பொழிந்ததும் உண்டு
விழிகளால் நீ வீசிய பசளைகளால்
மரங்கள் முளைத்து செழித்தன
நாங்கள் கைவீசி நடந்த நாட்களில்
ஒரு கானகமே உருவாகிற்று

உன்னிதயத்திலிருந்து பறவைகளை பறக்கச்செய்தாய்
உன்மொழிகளால் மான்களையும் முயல்களையும் படைத்தாய்
உன் புன்சிரிப்புதானே பூக்களை மலர்வித்தது

எரிந்துவிழுந்த நாட்களில்
உன் உஷ்ணத்திலிருந்து
சிங்கங்களும் புலிகளும் தோன்றின

மயங்கிநின்ற பொழுதுகளில்
மூலிகைச் செடிகளை நட்டாய்
நெருக்கமான கணங்களில் கண்ணீர் வடித்தாய்

## அது நதியாயிற்று

பகலில் வெயிலாக உலவுவாய்
இரவில் இருளாக வருவாய்
கானகத்துக்குள் எல்லாமாகி நீ இருந்தாய்

கழுதைகள் நுழைய சந்தேகித்தேன்
எருமைகள் படையெடுக்க எகிறிப்போனேன்
என் பெருமூச்சு எழமுன்
சிங்கங்களும் புலிகளும்
மான்களையும் முயல்களையும்
வேட்டையாடி முடித்திருந்தன

எனக்குத் தெரியாமலேயே
நதியைக்குடித்து மரவேர்களையும்
கடித்தெறிந்திருந்தாய்

ஆணிவேர் அறுந்த கானகத்துக்குள்
அக்கினிக் குஞ்சை நீ பிரசவிக்கும் போது
அது எரிந்திருந்தது

21022015 மாலை 4.00 மணி

# என் உயிர் உன் கைகளில்

பனியில் நனையாத புற்றரையில்
அன்றைய தினசரி பத்திரிகையை
விரித்து அமர்கிறோம்

ஒரு வானம்பாடி பாட
இலைகள் குவிந்த மரத்தை நோக்கி
உன் பார்வையை வீசுகிறாய்
ஒரு இலை என் தலையில் விழுகிறது

பிறகு
மெதுவாக புன்னகைத்த வாறே
உன்னிதயத்திலிருந்து
காதல் புத்தகத்தை எடுத்து
என் முன்னால் வைக்கிறாய்

நான் உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்
புத்தகத்தை எடுத்து
உன் முகத்தை மூடுகிறாய்
புத்தகத்தின் முன் அட்டையைப் பார்க்கிறேன்
பூக்களை பிசைந்தெடுத்த சாயத்தில்
வரைந்த ஒரு அரூப ஓவியம்
விளங்க வில்லை

ஆனால் பார்த்துக்கொண்டே
இருக்க வேண்டும் போல
ஒரு அபூர்வ அழகியல்
அதற்குள் ஒளிர்ந்தது

உனக்கே ஆன புன்னகையுடன்
முன்னுரையை வாசிக்கிறாய்
மந்திரமொழி இன்பத்தேனாக
என் மனசுக்குள் பாய்கிறது

மீண்டும் அந்த அதிசய புன்னகையோடு
வசந்த கவிதைகளை வாசிக்கிறாய்
எனக்குள் நதிகள் ஊற்றெடுக்கின்றன
தேவதைகள் நீராடுகின்றனர்

ஜிப்ரானின் செல்மா
தன் அழகினால் அழகை ஆராதிக்க
நதிகளுக்கு கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தாள்
ஜிப்ரான் அவளழகை துவைத்துக்கொண்டிருந்தான்

மீன்கள் பாடுகின்றன
தாமரைகள் கதிரவனின் இறுக்கப்பிடியில்
நான் நதியில் மூழ்கிவிடுகிறேன்
உன்மடி என் உடலை சுமக்கிறது
என் உயிர் உன் கைகளில்

காதல் கற்பனையை நிறுத்திவிட்டு
மாலை தேனீர் அருந்துகிறேன்
வெளியில் மழை பெய்கிறது

11022015 மாலை 5.50 மணி

## என்ன செய்யப்போகிறோம்

இன்னும் ஒரு கடை எரித்தாயிற்று
அந்த சாம்பலில்
இனத்துவேசிகள்
தேநீர் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள்

நேற்றைய ஒரு நாள்
பள்ளிவாசலில்
பன்றி இரத்தம் கொட்டியாயிற்று
அந்த சிவப்பில்
இனவாதிகளின் வீரியம் விரிந்துள்ளது

பள்ளிவாசல்களை மண்ணோடு மண்ணாக்கும்
கத்திகள் கழுத்தை அறுக்கத்தொடங்கியுள்ளன

சட்டப் பத்திரிகைகளில்
பாலியல் வன்முறைக் கதைகள்
திட்டமிடப்பட்ட கற்பனையாய் எழுதப்பட்டு
உயிரூட்டப் படுதல்
பின்னர் அவை
ஆவேசமாய் ஊர்வலம் போதல்
பிறகு

பிசாசுகள் தீயை கக்குதல்

இதுவே தொடர்ந்தால்
நம் இருப்பு
சுடுகாட்டிலா

ஒன்று இரண்டு எனத்தொடங்கிய
இனவாத அட்டகாசங்கள்
நூறு நூறாய் வெடிக்க
அரசுக்கு அவை
வரவேற்பு பட்டாசுகள் போல

என்ன செய்யப்போகிறோம்
இனியும்
நாம் என்ன செய்யப்போகிறோம்

10042014 நேரம் மாலை 4.45

# என்னை என்ன செய்துகொண்டிருக்கிறாய்

என்ன செய்கிறாய்
என்னை என்ன செய்துகொண்டிருக்கிறாய்

கட்டிலில் சாய்ந்து
உன் விழிகளை நீரோடையாக்கி
என்னை நீராட்டுகிறாயா

உன் சந்திர கன்னத்தில்
என்னை முயலாக்கி கொஞ்சுகிறாயா

உன் சின்ன தீவுக் கனவுகளில்
என்னை கடலாக்கி
தோணி ஓட்டுகிறாயா

உனக்குப் பிடித்த கவிதையை
படிக்கிறாயா
கவிதையின் கிளவிகள்
நானாகிப் போனேனா

ஏதாவது எழுத முனைகிறாயா
கற்பனைகள் நானா
எழுத்தே உனக்கு நானா

என்ன செய்கிறாய்
என்னை என்ன செய்துகொண்டிருக்கிறாய்

நான் இங்கு பெரிதாய்
என்ன செய்யப்போகிறேன்
வழமைப்போல கணனியோடுதான்

கணனியில்
பதிகின்ற எழுத்துக்கள் எல்லாம்
நீயாகி பின் அது
முட்டைகளாகி முட்டைகளாகி
அது உடைந்து கத்திக்கொண்டு
பறந்து வரும் குருவிக் குஞ்சுகள்
என்னிதய நெல்வயலின்
காய்ந்த கதிர்களை கொத்தித் தின்கிறதே

23042014 இரவு 9.20

# ஏவாளின் புன்னகை

உயிரை அவள் விழிகளில் வைத்துவிட்டு
அவள் மடியில் உறங்கினேன்
றாகத்தான ஒரு தூக்கம்
எழநினைக்காத ஒரு சுகந்தம்
இதுவரை நான் தூக்கத்தில்
அனுபவித்தறியாத ஆனந்தம்

கனவில்
நான் ஏதேன் தோட்டத்து
மாதுளம் கனிகளை சுவைத்தேன்
பேரீச்சம்பழ மதுரசம் குடித்தேன்

ஏதேன் நதிகளில்
மீன்களோடு பேசியவாறு குளித்தேன்
வெண்கொக்குகள்
என்முதுகை தேய்த்து விட்டன

ஏதேன் பாம்புகள்
என்னை நெருங்கும் நேரத்தில்
அவள் என்னை எழுப்பினாள்
கண்களை மெல்ல திறந்தேன்

என் உயிர்
அவள் விழிகளுக்குள்
ஏதேன் பாம்புகளுடன்
களிநடம் புரியக் கண்டேன்

அவளைப் பார்த்தேன்
ஏவாளாய் புன்னகைத்தாள்

29112013 இரவு 8.30 மணி

# கடலாகி பாடல் எழுதுதல்

அருகில் அமர்ந்திருக்கிறாய்
உடல்களுக்கிடையில் ஒருஅடி இடைவெளி
உடல்மொழிகள் மௌனித்திருந்தன
உன் மூச்சால்
நான் சுவாசித்தேன்
மனசுக்குள் மழை
குமிழிகளை உடையாமல் வைத்திருந்தாய்
விழிகளில் ஒளிரும் மின்னல்
எனக்குள் பௌர்ணமியாகின
உன் உதடுகள் பேசின
நான் கவிதையாகிக் கொண்டிருந்தேன்
நீ வீசிய பார்வைகளில்
நான் என்னைப் பார்த்தேன்
கடல் காற்று தொட
பெரும் அலையைப் பார்க்கிறோம்
சிறுமணலைப் பார்த்து புன்னகைக்கிறாய்
நண்டுகள் உன் கண்களில்
படம் கீறுகின்றன
அந்தப் படங்களுக்கு
கடலாகி பாடல் எழுதுகிறேன்
இன்னும் எழுதுகிறேன்

நீ தூங்கி விட்டாய்
நான் எழுதுகிறேன்
இன்னும் எழுதுகிறேன்
நீ இந்தப் பாடலில்
எழுந்திருக்கும் வரையில்
எழுதுவேன்

06032015 இரவு 12.00 மணி

# கண்களுக்கு இனிப்பு ஊட்ட

சுகமான ஒரு விடியல்
எழும்போது அப்படித்தான் இருந்தது
சூரியனின் முதல் ஒளி
எனக்கு ஸலாம் சொல்லி
கொஞ்ச நேரம் கதைத்துக்கொண்டிருந்தது
மாமரத்துக்கு கிளிகளும் வந்து சேர்ந்தன
வெயில் தேனீர் பருகினோம்
காற்று குளிர் அப்பம் தந்தது
மரக்கிளைகளின் நடனம் ரசித்தோம்
இலைகளின் கவிதை படித்தோம்
மேகங்களின் குறுநாடகங்கள்
உணர்வுகளுக்கு உயிர் தந்தன
இனிய இயற்கையுடன் விழிகளின் ஓவியமொழியால்
நிறையவே பேசினோம் மனசுக்கு நிறைவாக இருந்தது
ஒரு புதுப்பொலிவுடனும் ஏர் உழவனின் வேகத்துடனும்
வெளியானேன் என் வேலைத்தளத்திற்கு
சூரியனின் ஏழு வர்ணங்களையும்
கடலில் கொட்டி என் மனத்தூரிகையின் சித்திரங்கள்
இயற்கை சுவரெங்கும் அன்பே வா
கண்களுக்கு இனிப்பு ஊட்ட

01082014 காலை 6.25 மணி

## கவிதையான கவிதைகள்

வானம் நீண்ட நாட்களாய்
கவிதை எழுதவில்லை என்று
பூமி வெயிலிடம் குறைசொன்னது
எதிர்பார்த்திருத்தலில் உடல் வரண்டு
மனகானகம் அழிவதையும் சொல்லி வைத்தது
வெயில் கடலோடு கூடிப்பேசி
நீராவியை தூதனுப்பியது
மின்னலாய் சிரித்த வானம்
மறைத்துவைத்திருந்த கவிதைகளை
கொட்டத் தொடங்கியது
பூமி வாயைப்பிளந்தது
என் வானம் ஒரு மகாகவியா
ஆணிஅடித்தது போல் அமர்ந்து
அத்தனை கவிதைகளையும்
பொருள் விளங்கவாசித்து முடித்தது
பூமி
நவீன கவிதைகள்
மரவேர்களில் தொகுப்பாகின
காவியமாய் நீளும் கவிதைகளை
கடல் பதிப்பகம்
உரிமையாக்கிக் கொண்டது

நான் விரும்பிப்படிக்கும்
கவிதையான கவிதைகளை
நதி தன்மொழியில் பெயர்த்துக்கொண்டிருந்தது
நானும் அவளும்
நதி மொழிபெயர்த்த கவிதைகளை
சரிபார்க்கத் தொடங்குகிறோம்
கொஞ்ச நேரத்தில்
நீரின்மொழியாகிய அவள்
என்னை கவிதையாக்கி விட்டாள்
பூமியும் வானமும் சேர்ந்து
என்னைப் படிக்கின்றன

01042015 இரவு 9.00 மணி

# கனவில் அமைச்சர்கள்

கனவில் அமைச்சர்களைக் கண்டேன்
அரச இல்லத்தில்

எனக்கு நன்றாக தெரிந்த அமைச்சரொருவர்
அரச இல்லத்தின் கக்கூஸ்களைக் கழுவிக் கொண்டிருந்தார்
அம்மணமாக
என்னைக் கண்டதும்
மலமாகி மறைந்துப்போனார்

சினிமா நடிகர்களின் அலங்காரத்துடன்
மேடைகளில் அட்டகாசமாய் தோன்றும் அமைச்சர்
அரச குசினியில்
அழுக்குப் பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்தார்
எலும்புத்துண்டுகளில் ஒட்டியிருந்த
மாமிச மிச்சங்களை நக்கியவாறு

ஏழைகளின் அடிவயிற்றில் அடித்துக்கொண்டிருக்கும்
தொந்திதொங்கிய அமைச்சர்கள்
ஆறேழு பேர் பணமூட்டைகளில்
தூசு தட்டிக்கொண்டிருந்தார்கள்
மலைப்பாம்புகளைப் போல

சில மூட்டைகளை விழுங்கியவாறு
அவர்களின் தொந்தி தொங்க காரணம் தெரிந்தது

சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்கவந்த
நம்ம அமைச்சர்கள்
கால்நடைகளுக்கு புண்ணாக்கு கரைத்துக்கொண்டிருந்தார்கள்
என்னைக் கண்டதும்
எருமைமாடுகளின் வாலால்
முகத்தை மறைத்துக்கொண்டார்கள்

இனவாத அமைச்சர்கள்
பன்றிகளை அறுத்துக் கொண்டிருந்தார்கள்
அவற்றின் இரத்தத்தையும் மூத்திரத்தையும்
கலந்துக் குடித்தவாறு

மூடப்பட்ட ஒரு அறையில்
ஆற்றங்கரையில் அழுக்குத்துணி கழுவும்
சத்தம் போல கேட்கிறது
அந்த அறைப்பக்கமாகப் போகிறேன்
கதவிடுக்குகளால் தெறித்த துர்நாற்றத்தால்
என் சதைகள் உருகிவிட்டன

கடைக்குப் போகும் அமைச்சர்கள்
அரச சுடுகாட்டில் பேய்களாகி
பொதுமக்களின் இதயங்களை கடித்துச் சுவைத்து
சிதைத்துப் புதைத்துக்கொண்டிருந்தார்கள்

துப்பாக்கிகளை வணங்கும் அமைச்சர்கள்
இறுதிப்போரின் இரத்தத்தால் நிறைந்துப்பொங்கிய

நந்திக்கடலை மதுவாக்கி குடித்துக்கொண்டிருந்தார்கள்
இனத்துவேச சிகரெட்டுக்களை சுவைத்தவாறு

அந்த அமைச்சர் பேசுவதைக் கேட்கும் போதெல்லாம்
நாய்கள் குலைப்பது போலவே இருக்கிறது எனக்கு
அப்போதெல்லாம் நாய்களின் மொழியையும்
அமைச்சர் கற்றிருக்கக் கூடும் என நினைத்துக்கொள்வேன்
என்நினைப்பு சரிதான்
அவர் நாய்பாஷையில் பாடியவாறு
அரசஇல்லத்து நாய்களை குளிப்பாட்டிக்கொண்டிருந்தார்
என்னைக் கண்டதும் வெறிக்கொண்டு பாய்ந்தார்
கடிநாய் பயத்தில் கத்தினேன்
மனைவி சிரித்தவாறு என்னைத்தட்டினாள்
"இன்றும் கனவில் அமைச்சர்களா?"

31082014 பகல் 1.30 மணி

# கோடை மழை

மூன்று மாதத்துக்கு மேலாய்
அவளைக் காணவில்லை
என் மனதின் வாட்டத்தைப்பார்த்து
மரம் சொன்னது
அவள் வானத்தில் இருப்பதாக
நதியும் அதை உறுதிசெய்தது

வயல் ஏதும் பேசவில்லை
ஆனால் அது கோபத்தில்
வெடித்துக்கொண்டிருந்தது
காற்றுக்கு தூசுப்பிசாசு அடித்துக்கொண்டிருந்தது
அரசியல் வாதிகள் ஏழைகளின் வயிற்றில் அடிப்பது போல

சூரியனைப் பற்றி என்ன சொல்ல
அது இந்த அரசியலைப்போல
வயிறெரியும் நெருப்பை கொட்டிக்கொண்டிருந்தது

தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள்
மக்களிடம் நல்லபிள்ளைகளாய்
நடந்துக்கொள்வது போல
அந்தியில் கதிரவன் கொஞ்சம் அடங்கியிருந்தான்

நான்
மரம்
நதி
வயல் எல்லோரும் வானத்தைப் பார்த்திருந்தோம்
காற்று குளிர்பானத்துடன் ஆறுதல் சொல்லிக்
கொண்டிருந்தது
மயில் எம் கவலையை மறக்கச்செய்ய
அழகாய் ஆடிக்கொண்டிருந்தது

மீகாயிலைப் போல இரக்கமுடைய அவள்
மழையாக வந்தாள்

(மீகாயில் : மழைக்கு பொறுப்பான வானவர்)

06042014 மாலை 5.30

# கோபம்

இரவு முழுக்க நிலவு சொன்னது
என் கோபத்தை குறைக்குமாறு
நான் சொன்னேன்
பிழைகளால் மட்டுமே
பிழைப்பு நடத்துபவர்களை காணும் போது
கோபம் தானாகவே பத்திவிடுகிறதே
நிலவு என்னை தன் மடிக்குள்
இறுக அணைத்துக்கொண்டது
நீண்ட மௌனத்தின் பிறகு
நான் சாந்தமானேன்
நிலவு பால்வார்த்தைகளால் நிறையபேசியது
கட்டிலிலிருந்து எழுந்து
என் கண்களை பார்த்தவாறு சொன்னது
“கோபநெருப்பால் நீ எரிந்து
நாசமாகிக் கொண்டிருக்கிறாய்
நீ வேண்டும் எனக்கு”
நிலவு போய்விட்டது
என் கோபம் இரவுக்குள் புதைந்துப் போனது
நிதான ஒளிர்வுடன்
நான் உதயமானேன் ஒரு சூரியனாய்

13092014 காலை 6.20 மணி

## தர்கா நகர்

தர்கா நகருக்கு
போய் வந்ததிலிருந்து
மனசுக்கு பாரமாய் இருந்தது

சாம்பல் மலைகள் ஐந்தாறு
அவற்றில் வழியும்
குருதி அருவிகள் ஒரு நூறு
சமுத்திரங்களாக கண்ணீர்
தாங்கும் சக்தி எனக்கில்லை

சிதைந்து போன
ஒரு ஊரின் துயரில்
வெடித்துச் சிதறுகிறேன்

மோப்ப நாய்கள்
என் சதை துண்டுகளை
கௌவிச் செல்கின்றன
எல்லாவற்றுக்கும் காரணம் சொல்ல
நான் என்று

01072014 காலை 7.00 மணி

## தற்கொலை செய்த தூக்கம்

நடுநிசி தூக்கமில்லை
கனவுகள் விடுமுறையில்
கற்பனைகள் வானரங்களாக
சிறுநீர் கழித்துவரும் போது
நேரம் பார்த்தேன் 1.30 மணி
கடலாகிப் போன வானம்
பேரலையாக மழை
பேய்கள் கூத்தாடி நனைகின்ற சத்தம்
உன்னை நினைத்தேன்
நீ மானிட தேவைகளை
நிறைவேற்றிக் கொண்டிருக்கக் கூடும்
தூக்க மற்ற என் அவஸ்தை
உனக்கு தெரிந்திருக்க நியாயமில்லை
உன் ராஜகோபுரத்தின்
ஜன்னல்கள் கூட
எனக்காக திறக்கப் படுவதில்லை
என் மீது உனதன்பை
ஒரு வானம் பாடியாய் பாடியவாறு
பஞ்சிமர உச்சியில் நீ குடியிருத்தல்
வலிக்கிறது
உணர்வு முழுக்க உன்னைப்போர்த்தி

தூங்குகிறேன்
தூக்கம் தற்கொலை செய்திருக்கக் கூடும்
எழுந்து கணனியைத் திறக்கிறேன்
முகநூல் பக்கத்தில்
நீ இருக்கிறாய்
நேரம் 3.30 மணி

24122014 காலை 5.00 மணி

# தொலைந்த இலைராஜாக்கள்

வேர்
இலைகளில்
உயிரையே வைத்திருந்தது
வானத்தை நோக்கிய இலைகள்
மண்ணுக்குள் புதைந்திருந்த
வேர்களை கண்டுக் கொள்ளவே இல்லை
தலைக்கால் தெரியாமல் ஆட்டம் போட்டன
பசுமை அழகை பற்றி பெருமை அடித்தன
வெயிலை கொள்ளையடித்தன
மழையை உதைத்துத் தள்ளின
நிலவில் தன்னை அலங்கரித்து
ஆணவத்தோடு அசைந்தாடின
வேர்
மௌனமாய் பார்த்துக்கொண்டிருந்தது
அனல் காற்றுடன் சேர்ந்து
போதையில் ஊரையே
வதைசெய்ய இலைகள் முனைகையில்
பொறுத்திருந்த வேர்
இலைராஜாக்களை உதறித் தள்ளியது
அந்தரத்தில் தள்ளாடி
காய்ந்து அழிந்து

வேர்களின் காலடியில்
இலைகள் விழுந்துத் தொலைந்தன
பரிதியின் முதல் பிரார்த்தனை
ஒளியில் புதிய இலைகள்
துளிர்ப்பதைக் கண்டு
வேர்களுக்கு நான்
மழையைக் கொட்டினேன்

26022015 இரவு 10.00 மணி

## தூக்கணாங்குருவிகளின் பண்பாட்டை சிதைத்தல்

வனமரங்கள் அனைத்திலும்
குரங்குகளின் ராஜாங்கம்

கனியை சுவைத்து
காயை கடித்தெறிந்து
பூவை கிள்ளி வீசி
கிளையை உடைத்து
மரத்துக்கு மரம் அநியாயம் புரியும்
குரங்குகள்
போர்க்கால கொலையாளிகள் போல

அடாவடித்தனம் புரிவதே
குரங்குகளின் அரசியலா

பட்சிகளின் கூடுகளை சிதறடிப்பதில்
அலாதி பிரியம் அவைகளுக்கு
தனக்குத் தெரியாததை பட்சிகள் செய்வதால்

அதிலும்
தூக்கணாங்குருவிக் கூட்டைக்கண்டால்
குரங்குகள் வயிறெரிந்து வெடிக்கும்
இனவாதிகள் மேடைகளில் கத்துதல் போல

தூக்கணாங் குருவிகள் அழகியல் அம்சங்களோடு
கூடமைத்து பண்பாட்டை பேணிவாழ்வன
கூட்டுக்குள் மின்மினிகளின் ஒளியில்
இளசுகள் காதல் செய்யும்
குஞ்சுகள் புனிதநூலை பயிலும்
உறவுகள் பாட்டுபாடி மகிழும்

ஒருநாள் மழையில் நனையும்
குரங்கொன்றைப் பார்த்து
தாத்தா தூக்கணாங் குருவி சொன்னது
நீங்களும் எங்களைப்போல
கூடமைத்து பண்பாட்டோடு வாழலாமே

குரங்குக்கு வந்த ஆத்திரத்தில்
மலையை விழுங்குவது போல
வாயை பிளந்து கத்தியது
வனகுரங்குகள் ஒன்று சேர்ந்தன

அன்றுதான்
தூக்கணா குருவிகளின் பண்பாட்டை சிதைக்கும்
போரை குரங்குகள் பிரகடனப்படுத்திக் கொண்டன

29032014 மாலை 4.30

# நரிக்கும் முயலுக்கும் கல்யாணம்

ஆட்சியாளர்கள் எல்லாம்
கொழும்பில் இருப்பதாலா
சூரியன் இப்படி கொதிக்கிறான்
இல்லை
ஓட்டு போட்ட அப்பாவிகளின்
உணர்வுப் போறணையா
சூரியனை கொதிக்க வைக்கிறது

என் முகத்தில் வியர்வை
நதியாக பாய்கையில்
சின்ன கைகுட்டை என் செய்யும்
வடை பொரியும் தாச்சியில்
தவறி விழுந்த தக்காளிப் பழமாய்
என் முகம்

சீர்செய்யப்பட்ட ரோட்டில் நடக்கிறேன்
அரச கட்டிடங்கள்
என் கண்களுக்கு அதிபயங்கர
அணுஆயுதங்கள் போல தெரியவே
கண்களை மூடித் திறக்கிறேன்
மழை பெய்கிறது
வெயிலும் அடிக்கிறது

வெயிலும் மழையும்
ஒன்றாக வருகையில்
சின்ன வயதில்
நரிக்கும் முயலுக்கும் கல்யாணம் என்று
கத்தித் திரிந்ததை நினைத்தேன்

வெயில் நரியா
மழை முயலா

இதை இப்படி கற்பனை செய்தேன்
வெயிலான நரி ஆட்சியாளர்கள்
மழையான முயல்
ஒட்டு போட்ட அப்பாவிகளின் உணர்வுகள்

நரிகள் வயிறு பெருக்க
முயல்களின் இரத்தத்தை
உறிஞ்சிக் கொண்டிருக்கின்றனவா

இப்போ
மழையைக் காணோம்
வெயில் மட்டும்

துப்பாக்கி மலைகளின் குகைக் கூடாக
கார்கள் பறக்கின்றன
அரச புகையில் கண்கள் எரிய
ஒதுங்கி நடக்கிறேன்
இப்பவே ஊருக்கு போகும் நினைப்பில்

23042014 இரவு 10.40

# நாய்கழியாய் மழை

வாக்கு தேடி அலையும்
தேர்தல் கால அரசியல் வாதிகள் போல
வேட்டை நாய்களின் வேகத்துடன்
ஏழை கிராமத்துக்குள் பாய்ந்த மழை
முயல்கள் போன்ற குடில்களின்
குரல்வளையை கடித்து இரத்தம் உறிஞ்சியது

மலையை யானை பலத்துடன் உதைத்து
ஓலைகளால் வேயப்பட்ட பள்ளிக்கூடத்தை
மண்ணுக்குள் புதைத்தது
கிராமத்தின் இதயம்
பாராளுமன்றத்தில் சிதைந்தது போல

அப்பாவி கிராமத்தின்
அத்தனை கண்களையும்
அரச பாம்புகள்
விழுங்கி விட்டதையறியா மழைநாய்
வெளிச்சத்தை தேடி அலைந்ததில்
நெல் வயல்கள் நாசமாகின

கிராமத்து கால்நடைகளை மட்டுமல்ல
மாடாய் உழைக்கும் மனிதர்களையும்
ஒரு கைபிடித்தது

தின்று முடித்து
தூங்கிப் போனது

காகம் கரைவதைக் கேட்கவோ
பரிதி புன்னகை பூப்பதை பார்க்கவோ
செத்துப் போன கிராமத்துக்குள்
மழை நாயின் கழியைத் தவிர
மிச்சமாய் எதுவுமிருக்கவில்லை

விறலி விஷ்கி இரவிலிருந்து
இறங்கிவந்த அமைச்சர்
கிராமத்தின் பூதவுடலுக்கு
மலர் மாலை வைத்தார்
மனம் நொந்து அழுதார்

அவர் விழிகளிலிருந்து
ஏழை கிராமத்தின் கனவுகள்
நாய் கழியாய் வழிந்தன

24112013 மாலை 5.30 மணி

# நிலவுக்குள் உறங்கிய நான்

நாய்கள் குலைத்தன

மலைகள் உடைந்து
சுக்குநூறாகி சிதற குலைத்தன

காட்டு மரங்களெல்லாம்
வேரோடு கருகி
நாசமாக குலைத்தன

கடல் நீரெல்லாம்
மணலாகிப் போக குலைத்தன

வானம்
ஊதிப்பெருத்த பலூன்கள் போல
வெடித்துச் சிதறியது
நட்சத்திரங்களும் நிலவும்
நாய்களின் வாய்களுக்குள்

நாய்கழியின் துர்நாற்றத்தால்
மனிதர்கள் அனைவரும்
செத்து மடிந்தனர்

அரச சிம்மாசனத்தில்
நாய்கள் கலவி செய்து
மகிழ்ந்தன

குலைக்கின்ற நாய்கள்
இப்படித்தான்
கனவு கண்டன

நிஜங்கள்
கனவுகளாகிப் போக
நாய்களுக்கு
பைத்தியம் மெத்திப்போச்சு

வானத்தைப் பார்த்து
பாய்ந்து பாய்ந்து கத்தின
நிலவை கடித்துத்தின்ன
எச்சில் வடிய துடித்தன

நான் நிம்மதியாக
ஒரு முயல்குட்டியாய்
அவளின் உணர்வுகளோடு
நிலவுக்குள் உறங்கினேன்

03102014 இரவு 7.50 மணி

# நினைவுக் கவிதைகள்

தனித்திருந்த இந்த மூன்று நாட்களிலும்
உன் நினைவுகள்
தொகுத்திருந்த பன்மொழி கவிதைகளை
தமிழ் பெயர்த்துக் கொண்டிருந்தேன்

காலையில் நீ தருகின்ற
கோப்பி மொழிக்கவிதைகளையே
முதலில் படிக்கத்தொடங்கினேன்
சூடான சொற்களுக்கிடையில்
என் நாக்கை சுட்ட
அந்த படிமத்துக்கு
தமிழில் அர்த்தம் தேடி
கடலையே மறுபக்கம் புரட்டிவிட்டேன்
அர்த்தம் உன் கைகளில்
புதைந்திருப்பதை மறந்துபோய்

உன் விழிகளின் மொழிக்கவிதையை
பரிதியின் முதல் கிரணம்
படரும் நேரத்தில் பார்க்கத்தொடங்கினேன்
இன்னும் படித்து விளங்கவில்லை
என் அவஸ்தையைப் பார்த்துப் பார்த்து

பரிதியின் முகம் எரிந்து
சிவந்து பின் கறுத்துவிட்டது

உன் அசைவுகளின் மொழிக்கவிதையை
இரவில் படித்தேன்
விளங்கியது போல் இருந்தது
உவமைகளை தமிழ்பெயர்த்துக் கொண்டிருக்கையில்
நித்திரையானேன்
கனவில் அந்த கவிதைளை
என் மனச்சுவரில்
ஒரு கைதேர்ந்த நவீன ஓவியனைப்போல
வரையத் தொடங்கிவிட்டாய்

உன் உதடுகள் மொழிக்கவிதைகளையும்
உன் இரக்க மொழிக்கவிதைகளையும்
இன்னும் படிக்கவில்லை
நாளை நீயே படித்து விளக்க
வேண்டும் என்பதற்காக

நம் பயணமொழிக் கவிதைகளை
தமிழ் பெயர்த்து திருத்தி
செய்நேர்த்தி செய்து முடித்தாயிற்று
அந்த கவிதைகளில் தானே
ஏதேன் தோட்டத்து ஆப்பிள்கள் இருக்கின்றன

14042014 மாலை 5.00 மணி

## நினைவுகள் மரங்களாய் முளைத்தல்

குழந்தைகள் உண்டியலில்
சில்லறை சேர்த்தல் போல
நானும் உன்னோடு
பேச வேண்டிய நினைவுகளை
பல நாட்களாய்
மன உண்டியலில் சேர்த்து வருகிறேன்
மலைபோல் நிறைந்த உண்டியல்கள் பல
ஆனால் ஒதுங்கலால்
ஒரு நினைவை ஏனும்
சொல்ல முடியவில்லை
மலை உடைந்து
உணர்வுகள் நதியாகி
கடலில் தற்கொலை செய்கின்றன
இப்போதெல்லாம்
நினைவை சேர்ப்பதை நிறுத்திவிட்டேன்
நீ என்ற பிரபஞ்சத்தை சுற்றி வந்த
விண்கலம் எரிந்து வீழ்ந்தது போல
பேச்சு என்ற ஆயுதத்தின் மூலமாகவே
விசாரணை சமர் செய்த
சோக்ரட்டீஸை படிப்பதை மறந்து
அவரின் இல்லமாகிய

மரத்தையே படிக்கிறேன்
அதனுடைய மௌனமொழியையே கேட்கிறேன்
இன்று மரங்களுடன் மட்டுமே பேசுகிறேன்
மரங்களில் கூடு கட்டி வாழும்
பட்சிகளுடன் மட்டுமே உறவு
கானகமே என் வீடு
என் நினைவுகளை எல்லாம்
நிலத்தில் புதைத்து விட்டேன்
மரங்களாய் முளைக்க

01052015 காலை 8.15 மணி

## நினைவுச் சுழி

நினைவுச் சுழிக்குள் சுழலும் மனம்
கடலின் ஆழத்துக்குள் அடிஆழத்துக்குள் செல்கையில்
முத்துக்களாய் விழும் அந்த முத்தங்களை
விழுங்கும் திமிங்கலங்கள்
மூச்சுத்திணறி மேலெழுந்து கரையில் துப்புகின்றன
அலையாக சிதறும் முத்தங்களை
நண்டுகள் குருமணலில் புதைத்துக் கொண்டிருக்கின்றன

தனித்திருந்த அந்த தருணங்கள்
உப்புப்புல்வெளியாக கடலில் படர்கின்றன
புல்வெளியில் துள்ளி விளையாடுதல்
மீன்களுக்கு ஒரு புதிய அனுபவம்
ஓடுதிறந்து ஓரக்கண்களால்
ஆமைகள் பச்சைநிறத்தை பார்க்கையில்
வெட்கத்தாகத்தால் கிளர்ந்தெழுந்த அவள்
கடலை குடித்துவிட்டாள்
இன்னுமொரு தருணத்திற்காக

15052014 காலை 10.00 மணி

## நீ ஆகிய தூக்கம்

தூக்கமே நீ ஆகிப்போன
ஏகாந்த இரவில்
நான் விழித்திருந்தேன்
கனவுகளும் கற்பனைகளும்
ஓடி பிடித்து விளையாடின
கனவைத் துரத்தும் கற்பனை
கற்பனையைத் துரத்தும் கனவு
இரண்டும் களைத்துப்போய்
உன் ராஜகோபுர வாசலில் உறங்கின
கனவுக்குத் தெரியாமல்
கற்பனை மெல்ல எழுந்தது
உன்னழகை இரவின் திரையில்
நிலா தூரிகையால் வரைந்தது
அழகே உயிர்த்தது போல - ஒரு அழகு
என் ஆழ்மனப் பனிப்பாறையில்
துயர்கப்பல் மோத
கனவு துடித்தெழுந்து
உன்னை என் இதயத்துக்குள் புதைத்தது
அதிகாலை எழுந்து
ஒரு கவிதை எழுதினேன்

25022015 காலை 8.15 மணி

## நூறுவீதமாய் கரைதல்

செந்நிலத்தில் விழுந்து கரைகின்ற
கோடை மழை போல
நான் உனக்குள் கரைந்து போகின்றேன்...

உன் அழகு நதிகளில் நீந்துகின்ற மீன்கள்
என் விழிவலையில் உணர்வாயா?

உனதன்பு வனத்தின் மூலிகை வேர்களை
உரசிச் செல்லும்
என் சரீரமென்னும் கங்கை
ஆரோக்கியமாய் பாய்வதை அறிவாயா?

உன் அந்திவான உதடுகளில்
கடலளவு மாதுளம் சிவப்பை
கொட்டி வைத்தது யார்?

பசும் பாலில் போடப்பட்ட சீனியாய்
நூறுவீதமாய் நாம் கரைந்து போனோம்
இனித்தலில் சுவையிருக்கிறது
பாலில் சீனியை கரைத்த கரண்டியை
காத்தலில்தான் நம்காதல்
நிலைத்திருத்தல் சாத்தியம்!

21112013 நேரம் பி.ப. 2.24

# பாம்பு

எனக்குப் பிடிக்காத ஒரு படைப்பு
பாம்பு
படங்களில் கூட
பாம்பை நான் பார்ப்பதில்லை
அது விஷம் கொண்டது
காரணமா
அதன் உருவ அமைப்பு
காரணமா
சின்ன வயதில்
கேட்ட கதைகள் காரணமா
வீட்டுக்குள் நுழைந்த
பல பாம்புகளை கொன்றிருக்கிறேன்
மனப்புற்றுக்குள் நான் வேண்டாத
பாம்புகள் புணர்ந்து மகிழ்கின்றன
கொல்லவோ
மறந்து விடவோ முடிவதில்லை
பாம்பு பயம் பொல்லாதது
சில மனிதர்கள்
கோடி பாம்புகளால் ஆனவர்கள்
அவர்களில் இருந்து
நான் எப்பவும் ஒதுங்கியே இருக்கிறேன்

தேடி வந்து கொத்தும் இந்த தரித்திரங்களால்
நீலமாகி பலமுறை நான் செத்திருக்கிறேன்
மொழியில் விஷம் கக்கும்
அரவங்களை அழிக்க ஆயுதம் உண்டா
திட்ட மிட்ட செய்நேர்த்தியுடன்
அடுத்தவன் மனதை நோகடிக்கும்
மனித பாம்புகளை
அடித்துக் கொல்ல
தடிகளை தயார்செய்துக் கொள்க

தன்னை கொல்ல வந்த
கொடூர அரவங்களை
கவிதையால் கொன்று வென்ற
பாரதியை முன்னுதாரணமாய் கொண்டு
கவி எழுதுக

அரசியல் பாம்புகளுடன்
அலசி ஆராய்ந்து உறவு கொள்க

விஷ்ணுவின் வாகனத்தை
ஆழ்மனவானத்தில் நிறுத்தி வைக்க
ஆனாலும் ஆனாலும்
ஏவாளை மேய்ந்த அந்த அரவத்தை
எனக்கு ரொம்பவும் பிடிக்கும்
என்னவளை பிடித்ததால்

29032015 காலை 9.30 மணி

## பேய்களின் ஆய்வறையில்

நேற்றைய கனவில்
பேய்களின் ஆய்வறையை காண நேர்ந்தது

வைத்திய பீட ஆய்வறையின்
செய்நேர்த்திக்கு ஒப்பாக அது அமைந்திருந்தது

தேர்வுக்கு தெரிவான அரசியல் வாதிகளுக்கு
செய்முறை பயிற்சி வழங்க
சாத்தான் அழைக்கப்பட்டிருந்தான்

இஸ்ரேலிய இராணுவ தளபதிகளின் வேகத்துடன்
பேய்கள் இயங்கிக் கொண்டிருந்தன

வெள்ளை மாளிகையின் மொழியில்
பொய் சொல்லல் பற்றி
சாத்தான் விரிவுரை செய்தான்

அரச மாணவர்கள்
மனக்கணனியில் பதிகை செய்தனர்

தேர்தல் மேடைகளில் பச்சைபுழுகும்
ஒரு அரசமாணவன் அழைக்கப்பட்டான்
அந்த முதல்தர மாணவன் கொட்டிய
பொய்களின் நெருப்பு

சாத்தானையே சுட்டுவிட்டது
நமட்டுப் புன்னகையுடன்
குருவை மிஞ்சிய மாணவனின்
முதுகில் தட்டிக்கொடுத்தான்

வெட்கத்தை உடைத்தெறிதல் பற்றிய
பயிற்சியின் போது
வெட்கமே இவர்களுக்கு
இருக்கவில்லை என்பதை அறிந்த
சாத்தான் சந்தோசத்தால் குதித்தான்

மக்களின் உணர்வுகளை
உறிஞ்சிக் குடிக்கும் முறைமைகளை
இரண்டு பேய்கள் செய்துக்காட்டின

செய்முறையின் போது
பாராளுமன்ற உறுப்பினர்கள்
சாத்தானின் உணர்வுகளையே
கோடிப் பேய்களின் வேகத்துடன்
உறிஞ்சிய போது
சாத்தானே மரணப்பயத்துடன் துடித்துவிட்டான்

மக்களின் உணர்ச்சிகளை
இல்லாதொழித்தல் பற்றிய பயிற்சியுடன்
பெண் குட்டிச்சாத்தான்களும்
பெண் பேய்களும்
பலத்த பாதுகாப்புடன்
மறைவான இடங்களுக்கு
கொண்டு செல்லப்பட்டதனை
உறுதிசெய்து கொண்ட சாத்தான்
இரண்டு அமைச்சர்களை அழைத்தான்

சாத்தானின் உணர்ச்சிப் பாம்புகளை
சுனாமி அதிர்வலைகளுடன்
அமைச்சர்கள் வெளியில் எடுத்தபோது
பேய்களை திட்டியவாறு
சாத்தான் மிரண்டோடத்தொடங்கினான்

அமைச்சர்கள் சிரித்தனர்

02022014 இரவு 10.45

## பேய்களுடன் உறங்குபவர்களுக்கு

கண்களை மூடி கட்டிலில்
இன்னும் படுத்திருப்பவர்களுக்கு எங்கே
காலையின் ரம்மியம் கிடைக்கப்போகிறது
ஜன்னல் திறக்கையில் தழுவும்
சில்லென்ற காற்று
செவிக்கு தேன் பாய்ச்சும்
பட்சிகளின் பாடல்கள்
பரிதியின் உதடு சிவந்த
முதல் புன்னகை
நீரோடைக்குப் போகிறேன்
குளிரள்ளி குளிக்க
காக்கையாரே இன்னும் கரையாதே
பேய்களுடன் உறங்குபவர்களுக்கு
காலையின் அழகியல் தெரிவதில்லை

02082014 காலை 6.10 மணி

## மானம் விற்று சுவர்க்கம் செல்லல்

மீனோ மீன் என்று கூவிச் செல்லும்
நெய்தல் நிலபெண்கள் போல
ஊருக்குள் மானத்தை கூவிக்கூவி விற்று
பாராளுமன்றம் வந்தவர்கள்
அழுக்கை கழுவி
அவமானத்தை உடுத்திக் கொண்டார்கள்

பாராளுமன்ற அமர்வுகளில்
ஊரின் இதயத்தை
இறைச்சிக் கடைக்காரன் போல
துண்டு துண்டுகளாக வெட்டி வீசினார்கள்
மாமிசப்பட்சிணிகள் போல
பச்சை இதயத்துண்டுகளை கடித்தவாறு
ஊளையிட்டார்கள் கத்தினார்கள்
சிலர் வழியும் இரத்தத்தை
நக்கிக் குடித்தவாறு படமெடுத்தார்கள்
நாகங்கள் போல

நாய்கள் சிங்கவேசம் கொண்டு
கர்ஜிப்பதை தொலைக்காட்சியில் கண்டு
கார்ட்டூன் பார்ப்பது போல

சிறுவர்கள் கைகொட்டிச் சிரித்தனர்

ஊளையிட்டு கத்தி கர்ஜித்து களைத்தவர்கள்
ஊரின் உணர்வுகளை
மதுவென பருகியவாறு காரில் ஏறினார்கள்
சுவர்க்கத்துக்குச் செல்ல
அவர்களின் மானம்
ஊரை நரகமாக்கிக்கொண்டிருந்தது

04052015 காலை 10.15 மணி

## மீரிய பெத்த

இடியே மழையாகி
மலையை இடித்தது
வெடித்துச்சிதறிய நிலம் போர்நீராகி வழிந்தது
சகதிக்குள் சகதியாகிப் போகின
மண்ணை மலர்வித்த உயிர்கள்
இயந்திரம் கொண்டு தோண்டுகிறார்
மாண்டவரைத் தேடி
நாய்களும் அதற்கு உதவி
சிதைந்த உடல்துண்டுகளை
சுமந்து செல்கின்றார்
மீண்டோர் பதறுகிறார்
வருகின்றார்
மலையின் கண்ணீரை மழையாக சுமந்தோர்
ஆறுதல் மொழிகளை அள்ளி வீசுகிறார்
எல்லாம் இழந்தாருக்கு
உணவும் உடையும் வழங்குகிறார்
காவல் படையுடன் காரிலே பறந்துவிடுகிறார்
இன்னும் ஒரு மலை அசைகிறது
அழிந்து முடிந்ததும் வருவார்
மலையின் கண்ணீரை மழையாக சுமந்து

03112014 மாலை 6.45 மணி

## ரோஷ நரம்பை எடுத்தல்

அன்று நரியாருக்கு ஏகப்பட்ட வேலை
உதவிக்காக கழுதைகளையும் எருமைகளையும்
அழைத்திருந்தது
கைவேலையாட்களாக பன்றிகள் வந்திருந்தன

நரியாரின் வேலைத்தளம் தங்கக் கத்திகளாலும்
மாணிக்கக் குறடுகளாலும் நிறைந்திருந்தது
ஒரு மூலையில்
விலைமதிப்பு மிக்க வெண்மேகப் பஞ்சுகள்
குவிக்கப்பட்டிருந்தன
கோடிகொட்டி தேவலோகத்து
மதுவகைகள் வாங்கப்பட்டிருந்தன

அரச எலும்புகளை கடிக்கத்தொடங்கும் நாய்கள்
அம்மணமாய் வரிசையிலிருந்தன

அமெரிக்க ரெத்தசாலைகளிலும்
இஸ்ரேலிய யுத்தசாலைகளிலும்
வைத்தியகலாநிதிகளாகிய நரிகள்
தங்கக் கத்திகளை வாயில் வைத்திருந்தன
மாணிக்க குறடுகள் அவற்றின் வாலிலிருந்தன

நாய்கள் மயங்கும் வரைக்கும்
கழுதைகள் மதுவை பருக்கின
நரிகள் நாய்களின் ரோஷநரம்பின்
வாயிலை மெதுவாக வெட்டி
குறடினால் இழுத்தெடுத்தன
வடியும் இரத்தத்தை பஞ்சினால்
பன்றிகள் துடைத்தன
எருமைகள் தங்கள் சாணத்தினால்
அந்த நரம்புகளை புதைத்தன

அரசியல் செய்யும் புத்துணர்ச்சியுடன்
நரிகளை வணங்கின நாய்கள்
எருமைகளின் கழுதைகளின்
பன்றிகளின் பாதம்தொட்டு கும்பிட்டன

குரங்குகள் ரோஷம் இல்லா நாய்களை
எலும்புகள் குவிக்கப்பட்ட
சிங்கத்தின் குகைக்கு அழைத்துச்சென்றன

12052014 இரவு 10.00 மணி

## வயிறெரிந்த நெருப்பு

இரவு
ஒரு கறுப்பு ஆட்டுக்குட்டியாய்
துள்ளித் துள்ளி ஓடிக்கொண்டிருந்தது
அதன் கண்களில் நட்சத்திரங்கள் மின்னின
வட்ட வாயை திறக்கையில்
பால்நிலா பாய்ந்தது

சிறுமி ஒருத்தி தகப்பனாரின்
கையில் தொங்கியவாறு
ஆட்டின் வாயைப் பார்த்து
பல்லைக்காட்டிக் கொண்டிருந்தாள்

வீட்டு முன்வாசலில்
குழந்தையொன்று தாயின் முந்தானைக்குள் இருந்தது

பள்ளிவாயலிலிருந்து பாங்கொலி கேட்கும் நேரத்தில்தான்
அந்த கொடூரம் நிகழ்ந்தது
கறுப்பு ஆட்டுக் குட்டியின் கழுத்து அறுந்தது

மின்னல் வேகமாய் வந்த கல்லொன்று
குழந்தையின் தலையில் இரத்தம் குடித்தது

இனவெறியாய் பாய்ந்த துப்பாக்கி குண்டு
தகப்பனாரின் தலையை பிளந்தது
சிதறிய மூளைத்துண்டுகள்
சிறுமியின் தலையில்
சிறுமி இன்னும் தந்தையின் கையை பிடித்தவாறு
அழுதுக்கொண்டிருக்கிறாள்

கடலாய் குருதி வடிக்கும் குழந்தையை
மடியில் வைத்துக்கொண்டு
வியர்வையால் உருவான தனது வீடு எரிவதை
பார்த்துக் கொண்டிருக்கிறாள் அந்த தாய்

ஒரு சிறிய சம்பவம் என்று சொல்லியவாறு
காலையில் சூரியன் அந்த வீட்டுக்கு
வயிறெரிந்த நெருப்பை அள்ளிவந்தது
வெயில் எரிந்த அந்த வீட்டின்
மூலை முடுக்கெல்லாம் ஆயுதம் தேடுகிறது

09072014 காலை 6.00 மணி

# வரலாற்றை படுகொலை செய்தல்

வாப்பாவின் கையில் தொங்கியவாறு
வைகறை தொழுகைக்காக
நானும் தம்பியும் பள்ளி வாசலை நெருங்கும் போது
பனிமழை பள்ளிவாசலை கழுவிக்கொண்டிருக்கும்
அந்த ஈரம் இன்னும் என் மனசுக்குள்
ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது

150 வயசு பள்ளிவாசல்
என் கண்முன்னால்
படுகொலை செய்யப்பட்டபோது
நான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன்
என் மூத்த சகோதரன் என்னை
இழுத்துக் கொண்டு ஓடினான்
வாப்பா வீட்டுக் கதவை இறுக்கிமூட
உம்மா “இடிவிழும் நேரத்தில்” என்று
சொல்லியவாறு என்னை முறைத்துப் பார்த்தாள்

அன்று அதிகாலை
வாப்பா வீட்டில் தொழுதார்
உயிரை கையில் பிடித்தவாறு
உறங்கியதாக உம்மா சொல்லிக்கொண்டிருந்தாள்

உயிரை கையில் பிடிக்கும் வித்தையை
உம்மாவிடம் கேட்டுத்தெரியவேண்டும் என்று
நினைத்தவாறு தேனீர் அருந்தினேன்

காலை பனிமழை கழுவும் பள்ளிவாசலை
கரும்புகை கழுவிக்கொண்டிருந்தது
சில கடைகளை தீ தின்றிருந்தது
ஊர் முழுக்க
நெருப்பு கதைகளும்
உயிரை கையில் பிடிக்கின்ற
சங்கதிகளும் கடலாகிக்கொண்டிருந்தன
அப்போது எதுவும் விளங்கா
ஒரு வெறும் அலை நான்!

இப்படித்தான் காலம்காலமாக
எம் வரலாற்றை
படுகொலை செய்திருக்கிறார்கள்!

இப்போதும் செய்கிறார்கள்!!
இனியும் செய்வார்கள்!!!

நாம் என்ன செய்வோம்?
எம் மூதாதையர் போல
உயிரை கையில் பிடித்து வாழ்வதா?

11102014 காலை 6.00 மணி

## வன்புணர்வின் இரத்தமும் இனவெறி மொழிகளும்

அந்த கொடூரம் நிகழுமென்று
அவளுக்கு தெரிந்திருக்கவில்லை
இயற்கையும் தன் பாட்டில்தான் இயங்கியது
வெள்ளை சிறகுகளுடன்
பள்ளிக்கு பறந்த அழகுபுறா
படுபாவிகளின் வெறிப்புணர்வில்
துடித்தல் கண்டு
பூமி ஏன் மௌனமாய் இருந்தது

எல்லாம் முடிந்தாயிற்று
ஒரு பூவின் உணர்வுகள் சிதைந்தாயிற்று
ஒரு புறாவின் உயிர் பிரிந்தாயிற்று
ஒரு பெண்ணின் மீதான வன்புணர்வு
வெறும் செய்தியாக
போராட்ட ஊர்வலமாக
ஆக்ரோஷமொழியாக
பின்னர் சுவடு தெரியாமல்
மறைந்து போகும்
கடலுக்குள் விழுந்த ஒரு மழைத்துளி போல

ஆனாலும் ஆனாலும்
இனவெறி அரசியல் காமுகர்கள்

வன்புணர்வின் இரத்தத்தை
பருகிய் வெறியில்
வழமைப்போலவே
இனவாத தீக்கொள்ளி மொழிகளை
பேசத் தொடங்கிவிட்டார்கள்
தமிழ்பேசும் பெண் என்பதால்

22052015 இரவு 8.10 மணி

# வாயால் சேறு பூசுதல்

அண்டா வயிறுகளில் சேற்றை நிரப்பி
எனகொண்டா நாக்குகளால் பூசியவாறு
சேறுபூசிகள் ஊருக்குள் நுழைந்துவிட்டார்கள்
தேர்தல் வேலைகளுக்காக

காகங்கள் மரத்திலிருந்தும்
நாய்கள் நிலத்திலிருந்தும்
சேறுபூசத் தொடங்கிவிட்டன

ஊரெல்லாம் ஒரே சேறு
சேற்றிலிருந்து நாறி வீசும்
பொய்களின் நாற்றம் காற்றெல்லாம்
மூச்செடுக்க முடியவில்லை

கதவை இறுக்கி மூடி
வீட்டுக்குள் இருந்தேன்
உடைந்த கூரையால்
அறைக்குள் விழுந்த
ஒரு சொட்டுசேற்றிலிருந்து
பொய்கள் அரவங்களாய்
என் காதுக்குள் நுழைந்து
இதயத்தை கொத்தத் தொடங்கின
நான் கத்த கதவை உடைத்து

சேறுபூசிகள் வீட்டுக்குள்
வந்துவிட்டார்கள்

ஒரு மாபெரிய சேறுபூசி
என்னைப்பார்த்து புன்னகைத்தான்
மக்களை பச்சையாய் தின்ற இரத்தம்
அவன் பற்களில் பதிந்திருந்தது
கண்களில் யுத்தநெருப்பு
அச்சமும் அருவருப்பும் என்னை ஆட்கொள்கையில்
அவன் என் கால்களில் விழுந்தான்
என்னை கட்டி அணைத்தான்
சின்ன தங்கையை தூக்கிக்கொஞ்சினான்
பாட்டிக்கு வெத்திலை இடித்தான்
தேன் வடிய
எங்களது காதுகளில்
வாயால் சேறுபூசினான்
நாற்றம் வாசமாயிற்று

அரவங்களாய் இருந்த பொய்கள்
மாணிக்கங்களைக் கக்கின
வீடு முழுக்க வாக்குறுதிகள் நிறைந்தன

கழுத்தறுந்த ஊரைப்போல
எனது வீடும் அவனில் விழுந்தாச்சு

16092014 இரவு 8.00 மணி

## புன்னகையும் வலியும்

*1*

இரவு எமனாகி
என் தூக்கத்தை கொன்று விட்டது
நான் பகலில் தூங்கிய கோபம் அதற்கு
ஆனால் பகல் கனவில்
அவள் தந்த முத்த மயத்தில்
நான் இருந்தது பற்றி எதுவும்
இரவுக்கு தெரிந்திருக்கவில்லை

*2*

நுவரெலியாவின் குளிர் மழை தந்த ஈரம்
என் உணர்வுகளுக்குள்
அவளாகி இருப்பதால்
நான் பூத்துக்கொண்டிருக்கிறேன்
ரோஜா பூக்களாய்

*3*

மனப் புல்வெளியில்
அவளுடன் உட்கார்ந்து
பேசிக் கொண்டிருக்கையில்
பனிக் குவளைகளுடன்
ஏவாள் வந்துக்கொண்டிருந்தாள்

4

அந்தி வானத்தை பார்த்தவாறு
அவளுடன்
தொலைபேசியில் உரையாடினேன்
இரவில்
நிலவு மனசுக்குள்...

5

வானம் உடைந்து விழுந்த
ஒரு சிக்கலில்
நான் தனித்திருந்த நிமிடங்களில்
வெள்ளிப்பூவாய் வந்து
நீ தந்த ஒத்தடம்
எனக்குள் பகல் பரிதியின்
ஒளி வேகத்தை பாய்ச்சியுள்ளது

6

மொழியின் உஷ்ணம்
வார்த்தைகளாகி உணர்வுகளுக்குள்
உயிர் பெற்றெழுந்தது
அழகிய கிளியொன்று
வானத்தில் பறக்கிறது
கவிதையாகி

7

ஆகாய கிண்ணத்திலிருந்து
வழிகின்ற இரவை
நிரப்பிக் கொண்டிருக்கிறாள்
என் நித்திரைக்குள்
கனவில் அவள் நீச்சலடிக்க

8

கிளி ஒன்று என்னைப் பார்த்தது
வீட்டு வாசல் மரத்திலிருந்து
நான் அவளை நினைத்து
கிளியைப் பார்த்தேன் அது உயரப்பறந்து
பஞ்சு மரத்திலுள்ள தன் கூட்டுக்குள் நுழைந்தது
இன்னுமொரு கிளி வேகமாய் பறந்து வந்து
அந்த கூட்டுக்குள் நுழைவதை கண்டேன்

9

என் மனமடியில்
உட்கார்ந்து அழுதாள்
கோடி அன்பை கடலாக கொட்டி
மகிழ்ச்சியான பயணத்தை தொடங்கி விட்டன
என் கப்பல்கள்

10

ஊருக்குள் மட்டுமல்ல
என் மனசுக்குள்ளும் மழைதான்
அழிவைக் கொணரும் பெரிய மழை
முன்பெல்லாம் சின்னத் தூறலுக்கே
பெரிய குடையுடன் ஓடிவருவாய்
இப்போதெல்லாம்
மழையோடு நானும் மழையாகிப்போதல்
உனக்கு ஒரு வெறும் செய்தி மட்டுமே
மலைகள் உடைந்து என்னை
மண்ணோடு மண்ணாய் மூடிக்கொண்டிருக்கின்றன
என்னை அழிவிலிருந்து காக்கும் உன் பெருமூச்சை
தொலைத்து விட்டாயா

11

எனக்குள்
உன்னை நிரப்பிக்கொண்டிருந்தேன்
இரவுப் பூனை கண்களை மூடி
என்னை குடிக்கத்தொடங்கிவிட்டது

12

ஆழியை எடுத்து வந்தாய்
உன் விழிகளுக்குள்
என்னை நீந்தச் சொல்லி
பேரலையுடன் பேசியவாறு
ஆழத்துக்குள் நுழைந்தேன்-முத்தெடுக்க
ஆனால் விழிகளை மூடி
என்னை உன் விழியாக்கிவிட்டாய்

13

ஒரு மெய்யியல் காரியைப்போல
என் உணர்வுகளை
விசாரணை செய்துகொண்டிருந்தாய்
நான் உன்னிதய மரத்தடியில்
இளைப்பாறிக் கொண்டிருந்தேன்

14

நினைப்பு நடப்பவைகளை எழுதுவதில்லை
என்ற ஆவேசத்தில்
நினைப்பின் பக்கங்களை
நான் கிழித்தெறிய முனைகையில்
நினைப்பு என் நாடியை பிடித்து
ஆறுதல் சொன்னது
"நினைப்பதெல்லாம் நடப்பதில்லை"

**15**

நீ இல்லை
நான் இருந்தேன்
சூரியன் வந்தது
ஒளி இல்லாமல்
மழை வரவில்லை
இடி மட்டும்
வெடித்தது இதயத்தில்!

**16**

நீ தூர இருக்கிறாய்
நினைவில்
எனக்குள் ஒரு கவிதையாகி உள்ளாய்
படித்துக் கொண்டிருக்கிறேன்
தூக்கம் வரும் வரையில்

**17**

நீ என்னருகில்
வந்தபோது
என் மனக்கானகத்து
மரங்களெல்லாம்
தேன் வடிய
பூத்து விட்டன
தேனை சுவைக்கும்
வண்டுகளின் தொழிலை
உன் விழிகளுக்கு
எப்படி
கற்றுக் கொடுததாய்

**18**

இன்றிரவு
நீ ஒரு நூலாக
என் மனசுக்குள் நுழைந்தாய்
படித்தேன்
படிக்கிறேன்
படித்து முடிக்க
முடியாது போல
அது ஒரு நூல் அல்ல
நூலகம்

**19**

மழைப் பேனைகள்
நிலத்தாளில்
குமிழி மொழியில்
எழுதுகின்ற கவிதைகள்
எப்படி உடைந்து வழிகின்றன

**20**

வைகறைக் கூதலை துரத்த
வெயில் பால் அருந்தியவாறு
பனியில் முகம் கழுவிக்கொண்டிருக்கும்
பூக்களோடு பேசிக்கொண்டிருந்தோம்
என் உணர்வுகளுக்கு அவள் பழஞ்சோறு
ஊட்டத்தொடங்குகையில்
என் கற்பனைக்கு
சமுத்திர தாகமெடுக்கிறது
சிரித்தவாறு இதய பொய்கையில்
நீரள்ள தொடங்குகிறாள்

21

மனசின்

மூலை முடுக்கெல்லாம்

அன்பே

உன்னை நிரப்பிக்கொண்டிருக்கிறேன்

இந்த போலி உலகிலிருந்து

விடுதலை பெற

22

நீயும் நானும் வருகையில்

உன் கண்களில் விழுந்த

மழைத் துளி என்னிடம்

சொன்ன ரகசியத்தை

நினைத்துக் கொண்டிருக்கிறேன்

மழையாகி...

23

உன் நினைவுக்குள்

கரைகிறேன்

உணர்வுகள்

உன் கடலுக்குள் மீன்களாகி

எதைத் தேடுகின்றன?

24

உன் முகத்தில்

சந்தோஷம் பூத்ததில்

என் மனசுக்குள்

வண்டுகள்

தேன் பருகின

25

உன்னைப் பார்த்ததும்
என்னை இழந்துப்போனேன்
என் கடலே
மழையென்ற என் பெயரை
நீராக்கி விடாதே

26

நீ வேண்டும் போல
நீயே வேண்டும் போல
மரத்திலிருந்து உதிர்ந்த
இலையைப்பார்த்து
மரம் முணுமுணுத்தது
இலையை
ஒரு ஆடு கடித்துக்கொண்டிருந்தது

27

நானும் நீயும்
இன்று ஒன்றாக பயணிக்கும் போது
காற்று சொன்னது
உன் பெருமூச்சு
என்னை வரைந்துக்கொண்டிருப்பதாக

28

பூவெல்லாம் நீரானது போல
இரவெல்லாம் நீ
என் கற்பனைக்குள் கடலாக
நீந்துகிறோம் நீந்துகிறோம்
மீனாகி நீந்துகிறோம்
ஆழத்துக்குள் நுழைகையில்

தேனாகி முத்தமிடுகிறாய்
நான் மூர்ச்சையாகும் வரையில்
கற்பனையின் அலையை நிறுத்திப்பார்க்கிறேன்
நீயும் இல்லை
நீரும் இல்லை
பூவும் இல்லை
என் வெறுமை மட்டும் கடலாய்

29

பகல் அவள் தந்த அமுதம்
இன்னும் இனிக்கிறது
கரையாத ஒரு துளியை மொய்த்து
மனச்சிற்றெறும்புகள்
பல நூறு
இரா கனவில் அல்லது கற்பனையில்
அவள் அமுதமாகி வருதல்
நிச்சயம்

30

வாய பொத்து
ஊர் பத்தட்டும்
கடை சாம்பலாகட்டும்
உயிர் பந்தாடப்படட்டும்
பள்ளி வாசல்களை
நாசம் பண்ணட்டும்
நீ பேசாதே வாய பொத்து
அதிகாரம் எங்க கையில்
நாங்க எல்லாம் செய்வோம்
நீ எலும்ப கடி
சத்தம் போட்டால்

இனத்தீவிரவாதியாவாய்
வாய பொத்து என்ற வாறு
இனவாத பெற்றோலுக்கு
தீக்குச்சி வழங்கும் பெரிய கதிரை
வானத்தில் சுழன்றது

**31**

நீ எனக்குள்ளான இப்போதில்
வானம் விரிகிறது
நட்சத்திரங்கள் புன்னகைக்கின்றன
நான் நட்சத்திரங்களை முத்தமிட்டவாறு
வானத்தில் அமர்ந்து
கவிதை படிக்கிறேன்
நிலா புத்தகத்தில்
உன் இரசனை தேனாய் இனிக்கிறது
நான் எறும்பாகிப் போனேனா
காகம் கரையும் வரையில்

**32**

மூன்று நாட்களாய்
முன்னூறு தடவைக்கு மேலாய்
தற்கொலை செய்தாயிற்று
உயிர் இருப்பது
உன்னிடம் என்பதால்
இன்னும் நான் இருக்கிறேன்
உன்னுடைய சிறு விலகலில் கூட
நான் சிதறிவிடுகிறேன்
அந்தரத்தில் வெடித்து நொறுங்கும்
ஒரு விமானம் போல

33

வானப்பூனை விழிகளை மூடி
நிலாப்பால் குடிக்கத் தொடங்குகிறது
வழிகின்ற துளிகள்
இலைகளில் விழுந்து
முற்றமெங்கும் பரவிக்கிடந்தன
என் கற்பனை விமானத்தில்
நீயும் நானும் வானில் பறக்கிறோம்
இரவை சுவைத்தவாறு

34

இன்று உன் மூச்சை
சுவாசித்தேன்
அந்த நாள்
நினைவு மழையில்
குடையின்றி நனைந்த போது

35

என்னை கடலாக்கி
ஒரே மூச்சில் குடித்துவிட்டாய்
கண்களால்

36

இன்றைய நாள்
உன்னில் விடிந்தது
கனவில் நீ முறித்த சோம்பல்
என் உணர்வுகளை உசுப்புகிறது
நினைவுகள்
மனசுக்குள் கவிதையாகின்றன
நீ ஓவியமாய் தெரிகிறாய்

இன்றைய நாள்
கவிதையாகவும்
ஓவியமாகவும் விரிவது
நீ முறித்த சோம்பலா

37

உன் வழமையான
புன்னகையை பொலியாமல் போன
இந்தப் பொழுதுகளில்
மழை பொழிவது
இறகு முறிந்த பட்சிக்காகவா?

38

அழ விழிகளுக்குள் மழையில்லை
மனசுக்குள் உஷ்ணம்
உடல் நெருப்பானது போல
உணர்வின் உயிர் சிற்றெறும்புகளாகி தேடி அலைகின்றன
உன்னை
என் தேன் மலையே
ஒரு துளி பரிமாறு பசியாற

39

நீ இரா கடலில் மீனாக
நீந்துகையில்
நான் நீயாகி
நீந்தினேன் இரவெல்லாம்

40

உன் அழகு என்னைக் கொல்கிறது
வண்ணத்துப்பூச்சியே வா

வண்ணங்களால் வாழ்வோம்
வெறும் பொய்களால் நிரம்பிய
மகத்தான கவிதைகளை மறந்து
வண்ணங்களை கவிதையாக்குவோம்

41

கனவு முழுக்க நீ இருந்தாய்
நிறைய ஓவியங்கள்
நடனங்கள்
பாடல்கள்
கவிதைகள்
தங்கத் தட்டுக்களாய்
பறக்கும் நட்சத்திரங்கள்
பொன்மழைச் சாரலில்
நனைந்த புல்வெளி
ஆனந்த சங்கதிகள்
அத்தனையும் இருந்தன
இரவு படைத்த அழகு முழுக்க
என் கனவுக்குள் இருந்தது
நிலவு போல
நீ போல
இந்த காகம் ஏன் என் கனவை கத்தித் தின்றது

43

என் உணர்வுகளின்
மொத்தத்திலும்
நீ இருக்கிறாய்
நீயே இருக்கிறாய்
உயிராய்!

## ஈழக்கவி பற்றி.....



எழில் கொஞ்சும் மலையகத்தில்
"ஈழக்கவி" எனும் அழகான பெயர் சூடி
எழுதி வரும் இவரை நாடறியும்!
நாட்டிலுள்ள நல்லபல ஏடறியும்!

இவர் ஒரு பேராசான் என்பதனால்
இவரது எழுத்துக்களை மதிப்பிடுமுன்
என்னை நானே நிறுத்துப்பார்த்தேன்!

எடுத்த எடுப்பிலேயே
இவர் தன் வாக்குமூலத்தில்
இன்னொரு தொல்காப்பியராகின்றார்!

எது கவிதை என்பதற்கு
இவரும் சூத்திரம் எழுதித்தருகின்றார்:

"அது
ஆத்மாவின் குழந்தை
.........
உணர்வுகளின் மொழி
கவிதை"

இவரது கவிதைகள் பலவற்றில்
கந்தகம் மணக்கின்றது.
இன்னும் சிலகவிதைகள்
இனவாதம் பற்றி பேசுகின்றன.

மேலும் சிலகவிதைகளில்
அசிங்கமான அரசியல் கூத்தாடிகளின்
அரிதாரம் கிழிக்கப்படுகின்றது!

இவரது கல்வித் தகமைகளும்
மிக நுட்பமான அனுபவங்களும்
கூர்மையான சமூகப் பார்வையும்
இவரது கவிதைகளுக்கு மெருகூட்டுகின்றன.

எழுத்துவளமும் இலக்கியத் திறனுமிக்க
இந்தக் கவிஞரையும் இவரது படைப்புகள் பற்றியும்
இங்கே பேசுவதன் மூலம்
என் தமிழ் பெருமை கொள்ளுகின்றது!

-சிறீ சிறீஸ்கந்தராஜா
காற்றுவெளி மின்னிதழ்
மாசி, 2015

9789554676367
பரணி அச்சகம், நெல்லியடி. T.P : 0775991949